பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 03 புதன்கிழமை 18.12.2024 கதிர் 041

## இது ரகசியம் அல்ல!

பொதுத் தேர்தலில் ரெலோ அடைந்த படுதோல்வியைத் தொடர்ந்தும், கட்சியின் நீண்டகால விசுவாசிகளைவேறுகட்சியிலிருந்து ரெலோவுக்குள் ☞2

### ஆண்டுக்கு ரூ. 1,200 மில். சேமிக்கும் வகையில்

# முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு அடுத்த வாரம் முதல் குறைக்கப்படும்

### இனிப் பொலிஸார் மட்டுமே கடமையில்

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுவரும் பாதுகாப்பு அடுத்த வாரம் முதல் குறைக்கப்படவுள்ளது. அவர்களுக்கு தரைப் படையினர் இதுவரை வழங்கி வந்த பாதுகாப்பு நீக்கப்பட்டு, இனிவரும் காலங்களில் பொலிஸார் மட்டுமே பாதுகாப்பு வழங்கவுள்ளனர். இதன் மூலம் ஆண்டுக்கு ஆயிரத்து 200 மில்லியன் ரூபாய்களைச் சேமிக்க முடியும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு ☞2

# நாடாளுமன்றத்தைத் தெறிக்கவிட்ட எம்.பிக்களின் கல்வித் தகைமைகள்

### வாதப் பிரதிவாதங்களால் அதிர்ந்தது சபை

கல்வித் தகைமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுக் கடும் தர்க்கம் நிலவியது. நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு சிலர் தமது கல்விச் சான்றிதழ்களைச் சபையில் சமர்ப்பிக்கும் அளவிற்கு இந்தத் தர்க்கம் தீவிரமாக இருந்தது.

நாடாளுமன்றம் செவ்வாய்க்கிழமை பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி தலைமையில் கூடியது. புதிய சபாநாயகர் தெரிவு இடம்பெறுவதற்கு முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமை தொடர்பான சர்ச்சை வெடித்தது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினரான காவிந்தஜெயவர்த்தன தனது கல்விப் பட்டச் சான்றிதழ்களை காட்டி சபையில் உரையாற்றினார்.

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி உரையாற்றுகையில், தான் ஒரு விசேட வைத்திய நிபுணர் அல்லர் என்றும் தனது உத்தியோகபூர்வ கடிதங்களிலும், விசிட்டிங் கார்டுகளிலும், மருந்துச் சீட்டுகளிலும் அவ்வாறான தலைப்பைப் பயன்படுத்தியதில்லை என்றும் தேர்தல் பரப்புரையின்போது தன்னை விசேட வைத்தியர் என்று ☞8

### 'கொவிட்'டின் போது

# எரியூட்டப்பட்ட முஸ்லிமகளுக்காக இழப்பீடுகள் வழங்கப்படவேண்டும்

### எதிர்க் கட்சித் தலைவர் சபையில் வலியுறுத்து.

''கொவிட்' பெருந்தொற்றுப் பரவல் காலங்களில் அந்த நேயாயல் உயிரிழந்த முஸ்லிம்களின் சடலங்கள் சமய வழக்கத்திற்கு மாறாக எரியூட்டப்பட்டதற்காக இழப்பீடு வழங்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ☞8

# கொவிட் தொற்றால் இறந்தோரின் விவரங்களை வெளியிடமுடியாது

### ஆளும்தரப்பு நேற்று சபையில் அறிவிப்பு

கொவிட் தொற்றால் உயிரிழந்த பின்னர் தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களை வெளியிடுவதற்கு வைத்திய நெறிமுறையில் இடமில்லை. அதனால் அவற்றை வெளியிட ☞2

# 4 எம்.பிக்கள் பதவியேற்பு

பத்தாவது நாடாளுமன்றத்தில் நான்கு புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதிச் சபாநாயகர் வைத்தியகலாநிதி ரிஸ்வி சாலி அவர்கள் முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றுக் செய்துகொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் ☞8

# முள்ளிவாய்க்காலில் நினைவாலயம் அமைக்க அனுமதியைத் தாருங்கள்

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றில் கோரிக்கை

**இறுதிப் போரின் மனிதப் பேரவலத்தின் சாட்சியாக முள்ளிவாய்க்காலில் ஒரு நினைவாலயத்தை அமைப்பதற்கு அனுமதி தாருங்கள். உலகின் மூத்தகுடிகளில் ஒன்றான தமிழ் இனம், உயிரிழந்தோரை நினைவுகொள்வதில் மிக உயர் நாகரீக பண்பாடுகளைக் கொண்டுள்ளது. எம் இன வரலாற்றில் மிக அதிகமான மக்கள் உயிரிழந்த ஒரு அவலத்தை நினைவுகூர, படுகொலைசெய்யப்பட்ட எம் உறவுகளை நினைவுகூர ஒரு நினைவாலயம் அமைக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகின்றது.**

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றத்தில் நேற்று இவ்வாறு வலியுறுத்தினார். சர்வதேச இறையாண்மை பிணைமுறி மறுசீரமைப்பு தொடர்பான விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:**

**2024 நவம்பர் 27 எமது மக்கள் தங்களின் உறவுகளுக்கு எதுவித இடர்பாடுமின்றி, அமைதியாக தமது அஞ்சலிகளை** ☞2

# பழிவாங்குவதற்காக மக்களை அலைக்கழிக்கும் அலுவலர்கள்

### எப்படி முடிகிறது எனச் சாடுகிறார் வடக்கு ஆளுநர்

மக்களைப் பழிவாங்குவதற்காக அவர்களை அலைக்கழிக்கும் சிந்தனை அரச அலுவலர்கள் அதுவும் புதிதாகப் பதவியேற்ற நிர்வாக அலுவலர்கள் சிலரிடம் இருப்பதை அவதானிக்கின்றேன் என்று சாடியுள்ளார் வடக்கு மாகாண ஆளுநர், முன்னாள் அரச உயர் அதிகாரியான வேதநாயகன்.

"இந்த எண்ணங்களை மாற்றுங்கள். போரால் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களை, எங்கள் மாகாணத்தை நாங்கள் எல்லோரும் இணைந்துதான் உயர்த்தவேண்டும்" என்றும் அவர் கோரிக்கை விடுத்தார் என்று வடமாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவும் 'வடந்தை' ☞8



# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் போராட்டக்காரர்கள் கைதாகவில்லை

### பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றில் விளக்கம்

கல்வி அமைச்சின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட அபிவிருத்திப் பணியாளர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

அவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு அமைய கைது இடம்பெற்றதாக எதிர்க்கட்சியின் உறுப்பினர் நளின் பண்டார குறிப்பிட்ட பொய்யான கருத்தை அவர் மீளப் பெற வேண்டும் எனச் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கைதுகள் இடம்பெறவில்லையாயின் அதனை வரவேற்பேன். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூற்றை ஆராய்ந்த தன் பின்னர் நாளை ☞9

# நாடாளுமன்றத்தில் நாமலை பந்தாடிய வர்த்தக அமைச்சர்

தந்தை ஜனாதிபதி என்பதால் பரீட்சை சட்டத்திட்டங்களை முழுமையாக மீறி தனி அறையில் இருந்து சட்டமாணி பரீட்சை எழுதிய நாமல் ராஜபக்ச பல்கலைக்கழகங்களில் கடினமாக படித்து பட்டம் பெற்றவர்களின் கல்வித் தகைமையை கேள்விக்குள்ளாக்குகிறார். முறையான விசாரணைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான ☞2

# திருட்டு தொடர்பில் தேடமுடியாததால் கல்வித் தகைமையை தேடுகின்றனர்

### முன்னேற்றம் தான் என்கிறார் பிரதமர் ஹரினி

தற்போதைய ஆளும் தரப்பு உறுப்பினர்களிடம் திருட்டுகள் தொடர்பில் தேட முடியாத காரணத்தினால் அவர்களின் கல்வித் தகைமைகள் பற்றி அறிய எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர் என்று பிரதமர் ஹரிணி நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

"எங்கள் ஆளும்தரப்பில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் தகைமைகள் தொடர்பில் இப்போது பெரும் ☞9

# தமிழ் அரசுக் கட்சியின் பவள விழா நிகழ்வு இன்று

### தந்தை செல்வா சதுக்கத்தில்

தமிழ் அரசுக் கட்சி தொடங்கப்பட்ட 75ஆவது ஆண்டு நிறைவு இன்றாகும். தந்தை செல்வாவால் தொடங்கப்பட்ட கட்சியின் பவளவிழா ஆண்டின் தொடக்க நாளான இன்று யாழ். நகரில் உள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் சிறப்பு நிகழ்வு காலை 8 மணியளவில் ☞9

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வந்தவர்களுக்காகப் பழிவாங்கும் தலைவர்களின் போக்கைத் தொடர்ந்தும் கட்சியின் தலைவர், செயலாளர், பொருளார்




ஆகியோர் பதவி விலகவேண்டும் என்கிற உட்கட்சிப் புரட்சி வெடித்துள்ளமை எமது வாசகர்கள் அறிந்ததே. அது தொடர்பான உள்வீட்டுத் தகவல்களையும் அவ்வப்போது வாசகர்களுக்குத் தெரிவித்து வந்திருக்கின்றேன். இப்போது இந்தப் புரட்சி உச்சத்தைத் தொட்டுள்ளது. கட்சியின் எதிர்காலம் கருதி நிர்வாகிகள் மூவர் பதவி விலகி புதியவர்களிடம் நிர்வாகத்தைக் கையளித்தே ஆகவேண்டும் என்கிற அழுத்தம் பயங்கரமாக எகிறிவருகின்றது. தலைமைக்கு விசுவாசமானவர்கள் என்று இதுவரை காலமும் கருத்தப்பட்டவர்களேகூட இப்போது அவர்கள் பதவி விலகவில்லை என்றால் கட்சியைக் காப்பாற்ற முடியாது என்று பகிரங்கமாகவே கருத்துத் தெரிவிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இதன்விளைவாகமுதலில்சற்றுஅசைந்து கொடுத்திருப்பவர் கட்சியின் செயலாளரான ஜனா எனப்படும் கருணாகரன். வட்ஸ்அப் குழு ஒன்றில் தான் பதவி விலகத் தயார் என்று அவர் அறிவித்திருக்கின்றார். அந்த வட்ஸ்அப் குழு கிட்டத்தட்ட கட்சியின் உத்தியோகபூர்வகுழுவைப்போன்றது. அதில் கட்சியின் தலைவர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்பவர்கள் யாரும் இணைக்கப்படவில்லை. தலைமைக்கு விசுவாசமானவர்கள், தலைமைமைய எதிர்த்துக் கேள்வி கேட்கமாட்டார்கள் என்று இதுவரையில் கருதப்பட்டவர்களே இருக்கின்றார்கள். ஆனால், அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதைப் போன்று இன்று அந்தக் குழுவிலும் பலர் கட்சித் தலைமை நிர்வாகிகள் விலகியே ஆகவேண்டும் என்பதால் தான் பதவி விலகத் தயார் என்று ஜனா அறிவித்துள்ளார்.

பதவி விலகத் தான் தயார் என்றும் பொறுப்பெடுக்க யார் தயாராக இருக்கிறீர்கள் என்று அவர் கேள்வி கேட்டுள்ளார். அதற்கு நீங்கள் முதலில் பதவி விலகுங்கள், யார் அந்த இடத்திற்கு வருவார்கள் என்பது உங்களுக்குத் தேவையில்லாது, ஏதோ இதற்கு முன்னர் கட்சிக்குச் செயலாளரே இல்லாதது போலவும் நீங்கள் இல்லை என்றால் இனியொரு செயலாளர் வரவேமாட்டார் என்பதைப் போலவும் கதைவிடாமல் வெளியேறுங்கள். ஏற்கனவே செயலாளராக இருந்தவர்களும் புதியவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் யாரோ ஒருவர் வருவார். எனக்குப் பிறகு யார் இருக்கிறார்கள் என்று சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டு இருக்காமல் புறப்படுங்கள் என்கிற சாரப்பட பதிலடிப் பதிவுகள் பல அந்தக் குழுவில் நேரடியாகவே வைக்கப்படுகின்றன.

இத்தனைக்கும் தான் இல்லாவிட்டால் இலங்கை இந்திய ஒப்பந்த காலத்திலும் தற்போதும் கிழக்கில் ரெலோ என்று ஒரு கட்சியே இருந்திருக்காது என்றும் ஜனா தனது முக்கியத்துவத்தைத் தானே எடுத்துக்காட்ட முயன்றிருக்கிறார் அந்தப் பதிவில். அதற்கும், உங்கள் சேவைக்காக நன்றி, வணக்கம், அவ்வளவுதான், கிளம்புங்கள் என்கிற வகையில் பதில்கள் பறக்கின்றன.

அடித்து விரட்டப்படும் வரையில் பதவிக் கதிரைகளைப் பிடித்துக்கொண்டிருப்பது என்பது இன்றைய அரசியல் தலைவர்களின் போக்கு ஆகிவிட்டது போலுள்ளது. மக்கள் அருச்சுனாபோன்றதுடிப்பானஇளைஞர்களை தலைமைக்குக் கொண்டுவருவதற்கு விரும்புகிறார்கள் என்பதை வெளிப்படையாகவே காட்டிய பின்னரும் பதவியைவிட்டுக் கொடுக்கமாட்டோம் என்று விடாப்பிடியாக நிற்கும் மாவை, செல்வம், ஜனா, சித்தார்த்தன், ஆனந்தசங்கரி போன்றோரின் நிலைமை இனிவரும் காலங்களில் இன்னும் பரிதாபகரமாகத்தான் முடியும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. மக்களின் உணர்வுகளையும் அவர்களின் சமிக்ஞைகளையும்புரிந்துகொள்ளமுடியாததலைவர்கள் விரட்டியடிக்கப்படுவதைத் தவிர வேறு தெரிவுகளைக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

.......................

தமிழ் அரசுக் கட்சியின் பவள விழா இன்று தொடங்குகின்றது. ஆனால் அது பற்றி கட்சியின்தலைமைதனக்குவேண்டும்என்று அடம்பிடிப்பவர்கள்எவரும்அக்கறைகாட்டினர் என்று தெரியவில்லை. தந்தை செல்வாவால் தொடங்கப்பட்ட தமிழ் அரசுக் கட்சிக்கு 75 ஆண்டுகள் நேற்றோடு நிறைவுற்றது. அடுத்த ஆண்டு அதன் பவள விழாவில் கட்சியின் மறுசீரமைப்பு அதன் எதிர்காலத்திற்கு மிக முக்கியமானது.

இன்றுகாலை8மணிக்குயாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் பவளவிழாவை ஒட்டிய நிகழ்வு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதில் கட்சியின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் அங்கு பொதுத் தேர்தல் முடிவுகள், கட்சியின் தலைமைகள் எனபன குறித்துச் சில ''சம்பவங்கள்'' செய்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்கிறார்கள் அவரை அறிந்தவர்கள். காத்திருப்போம்!

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## முள்ளிவாய்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தி தமது உணர்வலைகளை வெளிப்படுத்தி ஆறுதலடைந்தனர்.

அந்த வகையில் ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இலங்கைத் தீவில் காலங்காலமாக தொடர் இனவழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுவரும் தமிழர்கள், 2009இல் இடம்பெற்ற இறுதிப்போரில் வார்த்தைகளில் அடக்க முடியாத துன்பத்தை அனுபவித்து இனவழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டனர்.

இறுதிப்போரின் வலிகள் இன்னும் ஆறாத நிலையில் அப்போரில் தமது உறவுகளை இழந்த ஏராளமான மக்கள் இன்னும் தம் உணர்வுகளுடன் நடைபிணங்களாக வாழ்ந்து வருகின்றனர்.

தம்மை யாராவது காப்பாற்ற மாட்டார்களா என்ற ஏக்கத்தில் சின்னஞ்சிறியவர்கள் முதல், பெரியவர்கள் வரை ஏங்கித்தவித்த நிலை, 'பசி, பசி' எனக் குழந்தைகள் அழும்போது செய்வதறியாத நிலையில் பெற்றோர்கள் கலங்கிய அவலநிலை, பதுங்கு குழிகளைவிட்டு வெளியேவந்தால் தப்பமுடியாது என்றெண்ணி பதுங்கு குழிகளுக்குள்ளேயே தங்கியிருந்தநேரம் அதற்குள்ளேயும்குண்டுகள்விழுந்துஉறவுகள் மடிந்தபோது உயிரிழந்த தமது உறவுகளைப் புதைப்பதற்கு இயலாமல் உடலங்களை அவ்வாறே விட்டு ஓடிய நிலமைகள், ஆகியவற்றை எண்ணிப்பாருங்கள்.

இலட்சக்கணக்கில் தமிழ் உறவுகளைக் காவுகொண்ட அந்தப் பேரவலம், தமிழ்த் தேசிய இனத்தின் கூட்டு மன உளவியலில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இந்த நிலையில் அங்கு உறவுகளை இழந்து, தற்போது வாழ்ந்து வருகின்ற மக்கள் தம் உறவுகளை நினைவுக்கூர்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு நினைவிடம் தேவை என்பதை அங்குள்ள மக்கள் ஆதங்கத்துடன் கூறிவருகின்றனர்.

உயிரிழந்தோரை நினைவுகொள்வதில் உலகின் மூத்தகுடிகளில் ஒன்றான தமிழ் இனம், மிக உயர் நாகரீக பண்பாடுகளைக் கொண்டுள்ளது. எம் இன வரலாற்றில் மிக அதிகமானமக்கள்உயிரிழந்தஒருஅவலத்தை நினைவுகூர, படுகொலைசெய்யப்பட்ட எம் உறவுகளைநினைவுகூரஒருநினைவாலயம் அமைக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

ஆழிப்பேரலையினால் உயிரிழந்த மக்களுக்கெனமுல்லைத்தீவில்மட்டுமல்ல,பல இடங்களில்நினைவுமண்டபம்அமைக்கப்பட்டு அதில் உயிரிழந்த ஒவ்வொருவருடைய பெயரும் குறிக்கப்பட்டுள்ளது. இது காலாகாலத்திற்கும் உயிரிழந்தோரின் உறவுகளையும், சந்ததியினரையும் நினைவுகூர வழிசமைக்கின்றது.

அதேபோன்று முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நினைவாகக் கட்டப்படும் ஆலயத்தில் உயிரிழந்தோரின் பெயர்கள் பொறிக்கப்படுவது தத்தமது உறவுகளை காலாகாலத்திற்கும் அவர்களின் சந்ததிகள் நினைவுகூரவசதியாகஇருக்கும்.எம்இனத்தின் பண்பாட்டையும் பிரதிபலிப்பதாக அமையும். அந்தவகையில் தேசிய பேரவலத்தின் சாட்சியாக முள்ளிவாய்க்காலில் மே -18 நினைவுகூருமிடத்தில் நினைவாலயம் ஒன்று அமைக்கப்படவேண்டும்.

இறந்தவர்களை நாங்கள் அடக்கம்செய்யும்போது கல்லறைகளை அதன்மேல் அமைக்கின்றோம். அந்தக் கல்லறைகளில் சம்பந்தப்பட்ட உறவுகள், நினைவுதினங்களில் பால்தெளித்து, படையல்களைப் படைத்து, பூக்கள் சொரிந்து, தீபம் ஏற்றி தங்களுடைய மனக்கவலையை உள்ளத்திலிருந்து வெளிப்படுத்தி அழுது ஆற்றுகின்ற அந்த நிலைக்கு எமது மக்களுக்கும் வழிவிடும் வகையில் ஒரு நினைவாலயத்தை அமைப்பதற்கு எமது மக்களுக்குஅனுமதிதாருங்கள்.இனப்பாகுபாடு பாராது, நாம் முள்ளிவாய்க்காலில் ஓர் நினைவாலயம் அமைப்பதற்கு அனுமதி தாருங்கள் எனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## நாடாளுமன்றத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காகிதாதிகளுக்கான குறை நிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலை மாணவர்களின் கல்வி தொடர்பான குறை நிரப்பு பிரேரணையின் போதுநாடாளுமன்றஉறுப்பினர்களின்கல்வி தகைமை பற்றி பேசப்படுவது சிறந்ததொரு மாற்றமாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் கல்வித் தகைமை பற்றி ஏன் பேசப்படுவதில்லை என்று பலர் கேள்வியெழுப்புகிறார்கள்.

நாமல் ராஜபக்சவுடன் சட்டக்கல்லூரியில் கல்வி கற்றவர் வெளிநாட்டில் இருந்து இவ்விடயம் குறித்து பேசியுள்ளார். நாமல் ராஜபக்ச இந்தியாவில் பெற்றுக் கொண்ட ஏதோவொரு கல்விச் சான்றிதழைப் பயன்படுத்தியே சட்டக்கல்லூரிக்கு தேர்வாகியுள்ளார்.

நாமல் ராஜபக்ச பிரத்தியேக அறையில் இருந்து 2010 ஆம் ஆண்டு சட்டமாணி இறுதிப் பரீட்சையை எழுதினார் எனவும் அவருக்கு வினாத்தாள் முன்கூட்டியயே வழங்கப்பட்டதாகவும் சுவிற்சர்லாந்தில் அரசியல் அடைக்கலம் பெற்றுள்ள துசார என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ச முறையற்ற வகையில் பரீட்சைக்கு தோற்றியமை தொடர்பில் அந்த நபர் முறைப்பாடளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஏனெனில் நாமல் ராஜபக்சவின் தந்தை அப்போதைய ஜனாதிபதி.

இதன் பின்னர் நாமல் ராஜபக்ச ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பட்டத்தின் பின் படிப்புக்கு விண்ணப்பித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் உயர் பீடம் நாமல் ராஜபக்சவின் முதல் பட்டத்தை கேள்விக்குள்ளாக்கி அவரது விண்ணப்பத்தை நிராகரித்துள்ளது. இதுவே வரலாறு.

தந்தை ஜனாதிபதி என்பதால் பரீட்சைச் சட்டத்தை முழுமையாக மீறியே நாமல் ராஜபக்ச சட்டமாணி பரீட்சை எழுதினார். இது தொடர்பில் முறையாக விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். அத்தகைய நாமல் இன்று, பல்கலைக்கழகத்தில் கடினமாகப் படித்து பட்டம் பெற்றவர்களைப் பார்த்துக் கேள்வியெழுப்புகிறார் - என்றார்.

## கொவிட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.-

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பனிர் ரவூப் ஹக்கீம் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கொவிட் 19 வைரஸ் தொற்றின் காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்களைத் தகனம் செய்ய வேண்டும் என ஆளும்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, தகனம் செய்யப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை யாது?

அவ்வாறு உயிரிழந்த ஒவ்வொரு நபரினதும் பெயர், பாலினம், இனம், சமயம் நெருங்கிய உறவினரின் பெயர், முகவரி, சடலம் தகனம் செய்யப்பட்ட திகதி மற்றும் இடம் என்பவற்றைத் தனித்தனியே தெரிவிக்க முடியுமா? என ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த சுகாதாரத்துறை அமைச்சர், பெயர் விவரங்களை வெளியிட முடியாது என்றார்.

"கொவிட் தொற்றால் உயிரிழந்தவர்களில் 13 ஆயிரத்து 183 பேர் தகனம் செய்யப்பட்டனர். என்றாலும் தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர், பாலினம், இனம், சமயம் நெருங்கிய உறவினரின் பெயர், முகவரி, சடலம் தகனம் செய்யப்பட்ட திகதி மற்றும் இடம் போன்ற தகவல்களை வெளியிட முடியாமல் இருக்கிறது. ஏனெனில் 2016 12ஆம் இலக்க தகவல் அறியும் சட்டம் மற்றும் வைத்திய அடிப்படை நெறிமுறைக்கமைய இந்த விடயங்களை தெரிவிக்க முடியாது" என்று அவர் மேலும் பதிலளித்தார்.

அமைச்சரின் பதிலை ரவூப் ஹக்கீம் ஏற்றுக்கொள்ளவில்லை, "அமைச்சரின் இந்த பதில் ஆச்சரியமிக்கதாகும். நான் கேட்டிருந்த இந்த தகவல்கள் ஆளும்தரப்புப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டியவையாகும். இவை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். இவற்றை மறைக்க முற்படுவது ஒட்டுமொத்த சுகாதார அமைச்சின் நற்பெயருக்கும் கலங்கத்தை ஏற்படுத்தும் செயலாகும்.

அத்துடன் சுகாதார அமைச்சுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட செயலாளரும் இவ்வாறான நடவடிக்கையின்போது மௌனமாக இருந்தது மட்டுமல்லாது அதனை நியாயப்படுத்தியுமிருந்தார். இவ்வாறான நிலைமையிலே உங்களது ஆளும்தரப்புக்கு முஸ்லிம்கள் பெருமளவில் வாக்களித்தார்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அதனால் வேறு விடயங்களில் மறைந்துகொண்டு இந்த விவரங்களை வழங்காமல் இருப்பது பிழையான நடவடிக்கையாகும். அதனால் தயவு செய்து இந்தத் தகவல்களை எமக்கு பெற்றுத்தர வேண்டும் என்றார்.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், ''கொவிட் தொற்று தொடர்பில் கடந்த ஆளும்தரப்பு எடுத்த தீர்மானங்களில் எங்களுகக்கு உடன்பாடு இல்லை. அந்த பிரச்சினை தொடர்பில் நாங்கள் மிகவும் கவலையடைகிறோம். ஆனால் இந்த விடயத்தில்தகவல்மறைக்கும்விடயம்எதுவும் இல்லை. மருத்துவ நெறிமுறைக்கமைய இந்த தகவல்களை வெளியிட முடியாமல் இருக்கிறது" என்றார்.-

"கொவிட் தொற்றால் உயிரிழந்தவர்கள் குறித்த தகவல்களை மருத்துவ நெறிமுறைக்கமைய தெரிவிக்க முடியாது என்கிறீர்கள். ஆனால் அவ்வாறான நெறிமுறை இருப்பது தொடர்பாக நான் அறிந்ததில்லை. அவ்வாறு இருக்குமானால்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# மட்டகளப்பில் கசிப்பு, போதைப்பொருள் விற்பனைகளுக்கு எதிராகப் போராட்டம்





மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் முன்னெடுக்கப்படும் கசிப்பு விற்பனை மற்றும் போதைப்பொருள் விற்பனைகளை தடுக்கக்கோரி கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல பகுதிகளில் கசிப்பு மற்றும் போதைப்பொருள் பாவனையால் பெரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன எனத் தெரிவித்து இந்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பரித்திச்சேனை மங்கையர் கொத்தணி அமைப்பின் ஏற்பாட்டில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் பொதுமக்கள் இணைந்து இந்த கவன ஈர்ப்பு பேரணியையும் போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

இதன்போதுபரித்திச்சேனையிலிருந்து கவன ஈர்ப்பு பேரணி ஆரம்பமாகி தாண்டியடி விசேட அதிரடிப்படை முகாம் வரையில் சென்றது.

அங்குள்ள விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரியிடம் பிரதேசத்தில் காணப்படும் சட்ட விரோத கசிப்பு விற்பனை மற்றும் போதைப்பொருள் விற்பனைகளை தடுக்க உதவுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன் மகஜர் ஒன்றும் விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கொக்கட்டிச்சோலை-வவுணதீவு பிரதான வீதியூடாக வந்து வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பரித்திச்சேனையில் அதிகரித்துவரும் கசிப்பு விற்பனை மற்றும் போதைப்பொருள் விற்பனைகளைதடுக்க கோரியும்பிரதேச செயலகப்பிரிவுகளிலும் இவ்வாறான நிலைமைகளைத் தடுக்கக்கோரியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தின்போது இலஞ்சம் வாங்காதே, போதைப்பொருள் வியாபாரிகளை பாதுகாக்காதே, கசிப்பு பாவனையை தடுத்து நிறுத்து, போதைப்பொருள் விற்பனையை தடுத்து நிறுத்து போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன.

இதன்போது வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியையும் சந்தித்த போராட்டக்காரர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் கையளித்தனர்.

குறித்த பகுதியில் பொலிஸார் போதைப்பொருள் பாவனையை தடுக்க நடவடிக்கைகளை முன்னெடுத்துவருவதாகவும் அதற்காக பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்தார்.

அதனை தொடர்ந்து பேரணி, மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக வருகைதந்து அங்கும் கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்த மண்முனைமேற்குபிரதேசசெயலகஉதவி பிரதேச செயலாளர் யோகராஜாவுடன் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கலந்துரையாடினார்கள்.

அங்கு கருத்துத் தெரிவித்த அவர் - தமது பகுதிகளில் கசிப்பு உற்பத்தி,விற்பனை,போதைப்பொருள் விற்பனையை தடுப்பதற்கு முறையான நடவடிக்கையெடுக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் சமுர்த்தி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள்கடமையாற்றும்போது அவர்கள் மூலமும் இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். என்பதுடன் அவற்றை கட்டுப்படுத்த போதைப்பொருள் விற்பனை,கசிப்பு விற்பனை செய்யும் குடும்பங்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படும். மின்சாரம்,குடிநீர் உட்பட அனைத்து அரச மானியங்களையும் இடைநிறுத்த பிரதேச செயலாளர் நடவடிக்கையெடுக்கவேண்டும் .

அதன்மூலம் தமது பிரதேசத்தில் உள்ள போதைப்பொருள் வியாபாரிகள்,கசிப்பு வியாபாரிகளை நிறுத்தமுடியும் எனவும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் சட்ட விரோத கசிப்பு விற்பனை, போதைப்பொருள் விற்பனையை தடுப்பதற்கு பொதுமக்களுடன் இணைந்து காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாராகவுள்ளோம். - என்றார்.

மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் நீண்டகாலமாக இந்த பிரச்சினைக்கு தீர்வைக் காணுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதிலும் சிலர் இலஞ்சங்களைப்பெற்றுக்கொண்டு குற்றவாளிகளுக்கு உடந்தையாக செயற்பட்டதாகவும் முறையான செயற்பாடுகளை பொலிஸார் முன்னெடுக்காத காரணத்தாலேயே சட்ட விரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளன எனவும் போராட்டத்தில்கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

இலங்கையிலேயே வறுமையான பிரதேச செயலகப்பிரிவாக மண்முனை மேற்கு பிரதேச செயலகம் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் சட்ட விரோத கசிப்பு விற்பனை மற்றும் போதைப்பொருள் விற்பனையால்பாரியபிரச்சினைகளும் எழுவதுடன் பெண்கள் சிறுவர்களுக்கு எதிரானவன்முறைகளும்ஏற்படுகின்றன என இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் பிரதிநிதிகளாக இணைப்பாளர் டினேஸ், முன்னாள் மட்டக்கள்பபு மாநகரசபை உறுப்பினர் கௌரி ஆகியோர் கலந்துகொண்டு போராட்டத்திற்கு ஆதரவு வழங்கினார்கள்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினருக்கான மகஜர் பரித்திச்சேனை மங்கையர் கொத்தணி அமைப்பால் இணைப்பாளர் மற்றும் முன்னாள் மாநகரசபை உறுப்பினிடம் வழங்கிவைக்கப்பட்டது.

# யாழ். சாவகச்சேரி நகரசபையின் முன்றிலில் வர்த்தகர்களும், பொதுமக்களும் போராட்டம்

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி நகர வர்த்தகர்களும், பொதுமக்களும் சாவகச்சேரி நகரசபை முன்றிலில் நேற்று (செவ்வாய்க்கிழமை) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரிநகரசபையால் அண்மையில் கட்டப்பட்ட புதிய கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்கமாக கேள்வி கோரப்பட்டுள்ளது.

கடைகளைகட்ட ஆரம்பிக்கும்போது 2000 ஆம் ஆண்டு போரில் கடைகள் அழிவடைந்த வர்த்தகர்களுக்கு புதிய கடைத் தொகுதியில் முன்னுரிமை வழங்கப்படும் என நகர சபையால் உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த வாக்குறுதியை மீறி கேள்வி கோரப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விண்ணப்பதாரி நகராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்க வேண்டும் என்ற நிபந்தனையை உள்ளடக்க வேண்டும் எனக்கோரியுமே இந்துப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது போராட்டக்காரர்கள் நகரசபையின் பிரதான நுழைவாயிலை பூட்டி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து, அங்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் பூட்டை உடைத்து அகற்றியதோடு போராட்டகாரர்களை கலைக்க முற்பட்டனர். இதனால் நுழைவாயிலில் அமர்ந்தவாறு அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.



இத்தருணத்தில் நகரசபை வாகனங்களுக்கு பொறுப்பான அதிகாரி கழிவகற்றும் உழவியந்திரத்தால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது மோத முயற்சித்ததோடு அதைவீடியோ எடுத்த ஊடகவியலாளரையும் கடுமையாக அச்சுறுத்தினார். இதனால் அங்கு கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதேவேளை, குறித்த கேள்வி கோரலை இரு வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏற்க முடியாத செயல்

**கடந்த காலங்களில் அதியுச்ச சலுகைகளை அனுபவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுத் தலைவர் நிதியத்தில் இருந்தும் பெரும் பண உதவிகளைப் பெற்றிருக்கின்றார்கள் என்பது அதிர்ச்சியளிக்கக்கூடியதாக இருக்கின்றது. தமது மருத்துவச் செலவுகளுக்காக ஏழை எளிய மக்கள் இதே நிதியத்திடம் இருந்து ஒரு சில லட்சங்களைப் பெறவே முழி பிதுங்கிவிடும் நிலையில் அல்லது பெற மு–டியாமலேயே போய்விடும் நிலையில் இந்த அரசியல்வாதிகள் மட்டும் கோடிக் கணக்கான ரூபாய் பணத்தை தமது தேவைக்காகப் பெற்றிருப்பது ஆச்சரியத்தை மட்டுமல்ல விசனத்தையும் ஏற்படுத்துகின்றது.**

**2005– முதல் 2024 வரையான காலப்பகுதியில் 36 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசுத் தலைவர் நிதியத்தில் இருந்து கோடிக்கணக்கான ரூபா பணம் வழங்கப்பட்டதாக ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.**

**முன்னாள் பிரதமர் டி.மு ஜயரத்னவுக்கே இதில் அதிகூடிய தொகை வழங்கப்பட்டதாகவும் அவருக்கு மூன்று கோடி ரூபாய் வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.**

**இதேவேளை, 2022 – 2024 காலப்பகுதியில் தலைமை அமைச்சரின் [பிரதமரின்] மருத்துவப் பிரிவில் செயற்பட்ட நோயாளர் காவு வண்டிகளின் செலவுக்காக ஒரு கோடியே இருபத்தி ஒரு இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.**

**வறுமைக்கு தீர்வாக அரசுத் தலைவர் நிதியிலிருந்து கல்வித் தேவைகள், சமய வழிபாடுகள், மருத்துவத் தேவைகள் என்பவற்றுக்கு நிதி ஒதுக்க முடியும் என்றும் தேசத்திற்கு சேவையாற்றியவர்களும் இந்த நிதியைப் பெறமுடியும் எனவும் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அப்படியிருந்தும் பதவியிலிருந்த அரசியல்வாதிகளுக்கு அந்தப் பணம் கொடுக்கப்பட்டிருப்பது ஒருவகையில் பெரும் மோசடியே.**

**அரசுத்தலைவர்நிதியத்தில்இருந்துஉதவிபெற்றவர்களின் பெயர் விவரங்களைப் பார்க்கும்போது ’’இவர்கள் எல்லோருமா” என்று ஆச்சரியம் ஏற்படுகின்றது. ஏனெனில் அரசிடமிருந்து நிதி உதவி பெறுமளவிற்கு அவர்களின் பொருளாதார நிலைப்பாடு இருப்பதான தோற்றப்பாடு தெரியவில்லை. அவர்கள் மிகச் சிறப்பான வாழ்க்கை ஒன்றையே வாழ்கிறார்கள்.**

**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பி ஹாரிசன், பியசேன கமகே, சுமேதா ஜயசேன, மனோஜ் சிறிசேன. பி தயாரத்ன, எஸ்.சி.முத்து குமாரன, வாசுதேவ நாணயக்கார, சரத்அமுனுகம, எஸ்.பி.நாவின்னபோன்றோர் அந்தப் பணத்தைப் பெற்றுள்ளனர். இவர்களில் பலர் அமைச்சர்களாகவும் இருந்துள்ளனர். இந்தப் பட்டியலில் இன்னும் பலரின் பெயர்களும் இருக்கின்றன.**

**குறைந்தபட்சம் 9 லட்சத்திலிருந்து அதிகபட்சம் 3 கோடி ரூபாய் வரை இவர்கள் பெற்றுள்ளனர். எதற்காக இவர்கள் இந்தப் பணத்தைப் பெற்றார்கள் என்பது வெளிப்படுத்தப்படவில்லை என்றாலும், எதற்காக என்றாலும் இவர்கள் இப்படி ஏழைகளின் பணத்தை அதிகாரச் செல்வாக்கின் மூலம் பெற்றிருப்பது அதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்கிற மதிப்பை வைத்துப் பெற்றிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.**

**மனிதப் பாவனைக்கு உதவாத மருந்துகளைக் கொள்வனவு செய்தமைக்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவும் இந்தப் பட்டியலில் உள்ளார். தனது பிள்ளைகளை வெளிநாடுகளில் படிக்கவும் வாழவும் வைக்க முடிந்த அவருக்கு அரசிடமிருந்து அதுவும் ஏழைகளின் நிதியிலிருந்து பணம் பெறவேண்டிய என்ன தேவை வந்தது?**

**சாத்தியமான எல்லா வழிகளிலும் ஏழை மக்களின் பணத்தை இந்த அரசியல்வாதிகள் சூ–றையாடி இருப்பது ஏற்புடையது அல்ல. பணம் பெற்றவர்களின் விவரங்களை வெளியிடுவதுடன் மட்டும் நின்றுவிடாமல், எதற்காக அந்தப் பணம் வழங்கப்பட்டது என்பதை விசாரித்து, அவற்றில் திரும்பப் பெறப்படவேண்டியவற்றைப் பெறுவதற்கும் ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

# இது நைஜீரிய சபாநாயகரின் கதை

**உபுல் யோசப் பெர்னான்டோ**

”அவரது தாடி மட்டுமே உண்மையானது. மற்றவை அனைத்தும் போலி...”

நைஜீரிய நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் சபாநாயகர் சலிசு புஹாரிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் எழுப்பிய குரல் இது.

சலிசு புஹாரி 1990களில் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தனது நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுச் சபாநாயகர் ஆவதற்கு முன்பு, நைஜீரியா மக்களிடம் அவர் ஒரு எழுத்தாளன் மற்றும் அறிவுஜீவி என்று தன்னை முன்னிறுத்தியிருந்தார். நைஜீரியாவில் இராணுவ ஆட்சியை அகற்றிய பிறகு அவரும் அவரது கட்சியினரும் தேர்தலில் போட்டியிட்டனர். நைஜீரியாவின் இராணுவ ஆட்சியால் களைத்துப்போயிருந்த நைஜீரியா மக்கள் அவரையும் அவரது கட்சியையும் மீட்பர்களாகப் பார்த்து நம்பினார்கள்.

மிருகத்தனமான இராணுவ ஆட்சி முறையை மாற்றவும் நைஜீரியாவை ஆப்பிரிக்க கண்டத்தில் பணக்கார மற்றும் சக்திவாய்ந்த நாடாக மாற்றவும் தம்மால் மட்டுமே முடியும் என்று அவரும் அவரது கட்சியினரும் பரப்புரை செய்தனர். இந்த முயற்சியிலும் தேர்தல் பரப்புரைகளிலும் சாலிசு புஹாரி ஒரு மிக முக்கியமான ஆளாக இருந்தார்.

கனடா டொராண்டோ பல்கலைக்கழகத்தில் படித்த தான் ஒரு பட்டதாரி என்று கூறியே பொதுத் தேர்தலில் போட்டியிட்டார். நைஜீரிய இராணுவ ஆட்சி வீழ்ச்சியடைந்த பின்னர், வாக்காளர்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதற்காகப் படித்தவர்கள் என்று தாம் நம்பியவர்களைத் தேர்ந்தெடுத்தனர். தன்னை ஒரு படிப்பாளி என்று நிரூபிக்க புஹாரி தனது டொராண்டோ பல்கலைக்கழக பட்டப்படிப்பை ஆதாரமாகக் காட்டினார். தேர்தல் வெற்றிக்குப் பிறகு, அவரது கல்வி மற்றும் அறிவைக் கருத்தில் கொண்டு அவரை நாடாளுமன்ற சபாநாயகராக நியமிக்க அவரது கட்சி முடிவு செய்தது.

1999இ-ல் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு வாரங்களுக்குப் பிறகு, நைஜீரியாவில் உள்ள ஒரு வெளியீடு, புஹாரியின் டொராண்டோ பல்கலைக்கழகப் பட்டத்தைப் பற்றி நோண்டத் தொடங்கியது. அவர் பட்டம் பெறவில்லை அல்லது அவர் பல்கலைக்கழகத்தில் சேரவில்லை என்பதை அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டியது. அவர் மக்களிடம் காட்சிய அவரது சான்றிதழ் போலியானது என்பதை வெளிப்படுத்தியது. உடனே புஹாரி தனது எதிரிகள் தன்னை வேட்டையாடச் சதி செய்கின்றனர் என்று கூறினார்.

”இந்தக் குற்றச்சாட்டுகள் பொய்யானவை, என்னை அழிக்க இட்டுக்கட்டப்பட்டவை” என்று புஹாரி உரக்கக் கத்தினார். பதிலடியாக செய்தி இதழ், புஹாரியின் பட்டப்படிப்பை உறுதிப்படுத்துமாறு டொராண்டோவில் உள்ள பல்கலைக்கழகத்திற்கு கடிதம் எழுதியது. அதற்குப் பதிலளித்த டொரோன்டோ பல்கலைக்கழகமோ புஹாரிக்குத் தங்கள் பல்கலைக்கழகம் பட்டம் எதனையும் வழங்கவில்லை என்றும், எந்த ஒரு



சலிசு புஹாரி

விடயத்திற்காகவும் டொராண்டோ பல்கலைக்கழகத்தில் அவர் காலடி எடுத்து வைக்கவில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தது.

இதனால் ஜூலை 23, 1999 அவமானம் மற்றும் சங்கடத்திற்கு ஆளான புகாரி, பின்னர் தான் கூறியது பொய் என்று ஏற்றுக்கொண்டார். தான் பட்டம் பெறவில்லை என்பதை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

”தேசம் மற்றும் எனது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களிடம் நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். நான் அவர்களுக்கு பெரும் அவமானத்தை கொண்டு வந்துள்ளேன். மேலும் தேசம் என்னை மன்னித்து மீண்டும் தேசத்திற்கு சேவை செய்ய எனக்கு வாய்ப்பு கொடுக்கும் என்று நம்புகிறேன்” என்றார். அத்தோடு நிற்காமல் தனது சபாநாயகர் பதவியை மட்டுமல்லாது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறந்தார்.

மன்னிப்புக் கேட்டார் என்பதற்காக நைஜீரியச் சட்டங்கள் அவரைச் சும்மா விட்டுவிடவில்லை. போலிப் பட்டப்படிப்புச் சான்றிதழ் தயாரித்ததற்காக அவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது.

தென்னாபிரிக்காவின் வடமேல் மாகாண சபையின் துணை அவைத் தலைவர் கொஹோஷாவும் மே மாதம் இதேபோன்ற அவலநிலையை எதிர்கொண்டார். மே 2024இல் கட்சியின் செயற்குழு முன் அவசரமாக முற்படுமாறு ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் அவருக்கு அழைப்புக் கட்டளை அனுப்பியது. அந்த அவசரத்திற்குக் காரணம் அவரது கல்வித் தகைமை குறித்து சமூக ஊடகங்களில் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளே. இதையடுத்து தேசிய காங்கிரஸின் செயற்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டது. கோஷாவின் கல்விசான்றிதழ் குறித்து கட்சிக்கு எதுவும் தெரியாது என்றும், ஆனால் குற்றச்சாட்டுக்கள் குறித்து

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# இது நைஜீரிய.....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

விசாரிக்கப்படும் என்றும் பொதுமக்களுக்கு அது அறிவித்தது.

"அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர் உடனடியாக தனது துணை அவைத் தலைவர் பதவியிலிருந்து விலக்கப்படுவார்" என்று ஆப்பிரிக்க காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

இருப்பினும், கோஷாவின் செய்தித் தொடர்பாளர் ஊடகங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட கதையைக் கூறினார்.

"இது எங்களின் துணை அவைத் தலைவர் மீதும், எங்கள் கட்சி மீதும் சேறு பூசும் முயற்சி, இதுபோன்ற தகவல்களை விநியோகித்தது யார் என்று எங்களுக்குத் தெரியவில்லை, இது எங்கள் துணை அவைத் தலைவரை வேட்டையாட யாரோ செய்யும் சதிப்புரட்சி..." என்றார்.

ஆயினும்கூட, துணை அவைத் தலைவர் சாக்குப்போக்குகளுடன் தப்பி வெளியே வர முடியவில்லை, விசாரணைகளின் பின்னர் ஆப்பிரிக்க காங்கிரஸ் அவரை உடனடியாக பதவியை விட்டு வெளியேற உத்தரவிட்டது.

இந்த கோஷாவின் சம்பவத்திற்குப் பிறகு, அங்கு கல்விச் சான்றிதழ்கள் தொடர்பாக மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் இதேபோன்ற பல குற்றச்சாட்டுகள் எழுந்தன, ஆனால் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாவதற்கு கல்விச் சான்றிதழ்கள் ஒரு தகுதியல்ல என்று ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நிராகரித்துவிட்டது. தென்னாப்பிரிக்க அதிபருக்கும் கல்வித் தகுதிச் சான்றிதழ் இல்லை என்று அது வாதிட்டது. ஆனால் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸால் நிறுத்தப்படும் அனைத்து வேட்பாளர்களும் கிரிமினல் குற்றங்களிலிருந்து ஈடுபடாதவர்களாக இருப்பது மிக முக்கியமானது என்று அது தெரிவித்தது.

"நீங்கள் கட்சியால் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் தகுதிகளை வழங்குவதன் மூலம் நீங்கள் மக்களை எதிர்கொள்கிறீர்கள். இந்த வகையில் மக்களை ஏமாற்றினால் கட்சியையும் ஏமாற்றி விடுவீர்கள்..."

இப்படித்தான் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் தனது உறுப்பினர்களின் போலி கல்வித் தகுதிப் பிரச்சினையை தீர்த்து வைத்தது. கோஹோஷா, துணை அவைத் தலைவர் பதவியிலிருந்து வெளியேறிய போதிலும், மாகாண சபை உறுப்பினராகத் தொடர்கிறார். அவரை உடனடியாக பதவி நீக்கம் செய்யக் கோரி தேசிய காங்கிரஸின் தொழிற்சங்கங்கள் இப்போது போராடுகின்றன.

# அட்டாளைச்சேனையில் பயனாளிகளுக்கு ஆடுகள்

## கிராமிய வீட்டு ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ்

(றிபாஸ்)

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக்கைத்தொழில் அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரிவால் நடைமுறைப் படுத்தப்படும் கிராமிய வீட்டு ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஆடு வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை இடம்பெற்றது.

அட்டாளைச்சேனையில், பிரதேச செயலாளர் பீ.ரீ.எம்.இர்பானின் வழிகாட்டலின் கீழ் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கிவைக்கப்பட்டன.

கால்நடை வைத்திய அதிகாரி ஏ.தையுபா, பிரதேச செயலக கணக்காளர் எம்.அரசரெத்தினம் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கால்நடை வைத்திய அலுவலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.











# ஜனாதிபதி அநுரகுமார புத்த கயாவில் வழிபாடு

இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை புத்த கயாவிற்கு சென்று சித்தார்த்த இளவரசர் ஞானம் பெற்ற இடத்தில் அமைந்துள்ள மகாவிகாரை மற்றும் ஸ்ரீமகா போதி என்பவற்றைத் தரிசித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

பௌத்தர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த புத்த பெருமானின் வாழ்க்கையுடன் தொடர்புள்ள மிகப் புனிதமான நான்கு இடங்களில் ஒன்றாக புத்தகயா காணப்படுவதோடு 2002 ஆம் ஆண்டு புத்தகயா மகாவிகாரை உலக மரபுரிமையாக யுனொஸ்கோவினால் பிரகடனம் செய்யப்பட்டது.



இந்திய மகாபோதி சங்கத்தின் பொதுச்செயலாளர் வண. பெலவத்தே சீவலி தேரர் மற்றும் சாரநாத் மையத்தின் விகாராதிபதி வண. ரத்மல்வல சுமித்தானந்த தேரர் ஆகியோர் இதன்போது ஜனாதிபதிக்கு ஆசிர்வாதம் வழங்கினர்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில்ஜயந்த பெர்னாண்டோ ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.











# சட்டவாக்கல் செயற்பாட்டில் பாலினச் சமத்துவத்தை மேம்படுத்துவது குறித்து பாகிஸ்தானில் செயலமர்வு

சட்டவாக்க செயற்பாட்டில் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவது தொடர்பில் பாலின சமத்துவம் பற்றிய உணர்திறன் கொண்ட சட்டமூலங்களைத் தயாரிப்பது குறித்த செயலமர்வு கடந்த 14 மற்றும் 15ஆம் திகதிகளில் பாகிஸ்தானின் நாடாளுமன்ற சேவைகளுக்கான நிறுவனத்தில் நடைபெற்றது.

பாகிஸ்தான் நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தின் செயலாளர் ஷஹிதா ரெஹ்மானி தலைமையில் இது நடைபெற்றது.

இந்த செயலமர்வில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் பிரதி இணைத்தலைவர் சட்டத்தரணி சமிந்திராணி பண்டார கிரிஎல்லே மற்றும் ஒன்றியத்தின் உறுப்பினர் லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் கலந்துகொண்டனர்.

சர்வதேச தரங்கள் மற்றும் சட்டக் கட்டமைப்பு, பிராந்தியங்களிலிருந்தான சிறந்த நடைமுறைகள், பிரச்சினைகளை அடையாளம் காணுதல் மற்றும் இடைவெளிகளை ஆய்வு செய்தல், பெண்களுக்கு ஆதரவான சட்டங்களுக்கு அவசியமான அம்சங்கள், சட்டவாக்கத்தின் ஊடாக பாலின சமத்துவத்தை அடைவதற்கான வழிகள் போன்ற விடயங்கள் குறித்து சிறந்த புரிதல்கள் இச்செயலமர்வில் ஏற்படுத்தப்பட்டன.

இச்செயலமர்வில் பொதுநலவாய நாடாளுமன்றத்தின் பெண் நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் சைனாப் ஜிம்பா, மாலைதீவு நாடாளுமன்ற உறுப்பினர் அம்சா ரசீட் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# பருத்தித்துறையில் 2,000 பேருக்கு எலிக் காய்ச்சல் தடுப்பு மருந்து



பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் சுமார் 2 ஆயிரம் பேருக்கு எலிக்காய்ச்சல்களுக்கான தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற துறைசார் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி -

எமது பகுதிகளில் நோய் தொற்று ஏற்படக்கூடிய இடங்கள் என ஐந்துக்கும் மேற்பட்ட இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவற்றில் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

நீர் நிறைந்த விவசாய நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்களில் சென்று வரக்கூடியவர்கள் என அடையாளப் படுத்தப்பட் டவர்களுக்கு முன்னெச்சரிக்கையாக தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை சுமார் 2000 இற்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் எம்மிடம் போதிய மருந்துகள் காணப்படுகின்றன.

மேலதிகமாக மருந்துகள் தேவைப்படுமானால் சுகாதாரத் திணைக்களம் வழங்குவதற்கு தயாராக இருப்பதாக எமக்குத் தெரிவித்துள்ளது.

எமது பிரதேசத்தில் சுகாதாரத் துறை சார்ந்து ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்ற நிலையில் மருத்துவ மாணவர்களின் உதவியும் கிடைத்துள்ளது. - என்றார்.

# பல கொள்ளைகளுடன் தொடர்புடைய 3 சந்தேகநபர்கள் வவுனியாவில் கைது

பல்வேறு கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் வவுனியா பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தின் வவுனியா, மல்லாவி, அடம்பன் மற்றும் உளுக்குளம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர்கள் அநுராதபுரம் - கெக்கிராவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்பாணம் சாவகச்சேரி, பியகம மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்ட 37 மற்றும் 47 வயதுடையவர்கள் ஆவர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். 100

காலைக்கதிர் Kalaikkathir

# மூத்த ஊடகவியலாளர் நபாயிஸுக்கு 'இளங்கலைஞர் விருது' கிடைத்தது!

(அபு அலா)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 2024 மாகாண இலக்கிய விழாவில் மருதமுனையைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் றாஷிக் நபாயிஸ் ஊடகத்துறைக்கான இளங்கலைஞர் விருதை பெற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யூ.ஜி. திசாநாயக்க தலைமையில் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றவிழாவின்போதே அவர் கௌரவிக்கப்பட்டார்.

இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க சிறப்பு அதிதியாகவும், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

2007 ஆம் ஆண்டிலிருந்து ஊடகப்பணி மற்றும் சமூகப்பணியில் தன்னை அடையாளப்படுத்தி செயற்பட்டு வருகின்ற இவர், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் பிராந்திய செய்தியாளராக செயற்பட்டு, அதிக சமூகம்சார் கட்டுரைகள் பொது விடயங்கள் பற்றிய விழிப்புணர்வு ஆக்கங்களை எழுதி பொதுமக்களுக்கு பல விழிப்புணர்வுகளை வழங்கிவருகின்ற ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆவார்.



பொது அறிவு அறிமுகத் தொகுப்பு, யூரோ நாணய அறிமுகத் தொகுப்பு, ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி, மருதமுனை சமாதான நீதிபதிகள், அனர்த்தங்களும் நாமும் மற்றும் அழைப்போம் பயன்பெறுவோம் எனும் ஆறு நூல்களை எழுதி மக்கள் மத்தியில் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.





இவரின் சமூகம் சார் செயற்பாடுகளை கௌரவிக்கும் நோக்கில் கடந்த செவ்வாய்கிழமை திகதி கிழக்கு மாகாண

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட விருது வழங்கள் விழாவின்போதுசிறந்த ஊடகத் துறைக்கான 'இளங்கலைஞர் மாகாண விருது' சான்றிதழ் மற்றும் காசோலை போன்றன வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா சந்திரசிறிக்கும் கிட்டிய கலாபூஷனம் விருது

(கேதீஸ்)

நுவரெலியாவைச் சேர்ந்த சந்திரசிறி மஹாகம பல துறைகளில் சிறந்து விளங்கியதற்காக அரச கலாபூஷன் விருது வழங்கும் விழாவில் கலாபூஷன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நுவரெலியாவைச் சேர்ந்த சந்திரசிறி மஹாகமவுக்கு இந்த ஆண்டுக்கான அரசகலாபூஷண் விருது வழங்கப்பட்டுள்ளது.

புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் இணைந்து



ஓவியர், அரசியல் கார்ட்டூனிஸ்ட், நாவலாசிரியர், ஓவிய வடிவமைப்பாளர், பத்திரிகையாளர் என கலைத்துறையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை பாராட்டி 39 ஆவது தடவையாக கலாபூஷன் அரச விருது வழங்கும் விழாவை புத்தசாசன அமைச்சர் பேராசிரியர் ஹினிதுமசுனில் செனவி தலைமையில் அராலியகஹா மண்றில் நடைபெற்றது.

# பரவுவது வதந்தி

'ஜனாதிபதியின் கொடுப்பனவு' என்ற பெயரில் ஆளும் தரப்பின் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக வெளியாகும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என அரசதகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்தகைய வேலைத்திட்டம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் தற்போது உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பரப்பப்பட்டு வருவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அரசஉதவி வேலைத்திட்டம் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படுமாயின், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பின் ஊடாகப் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இது தொடர்பில் உண்மைக்குப் புறம்பான தகவல்களைப் பகிர்வதை தவிர்க்குமாறு அரசு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# கவிஞர் மதிபாலசிங்கத்திற்கு 2024இல் கலாபூசணம் விருது

(முபாரக்)

மூதூர் ஈச்சிலம்பற்றினைப் பிறப்பிடமாகவும், மல்லிகைத்தீவை வாழ்விடமாகவும் கொண்டவரும் நாடறிந்த வருமான கவிஞர் ப.மதிபாலசிங்கம்,

இவர் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரைக்கும் பல்துறைசார்ந்து எழுதிகொண்டிருக்கின்ற ஓயாத மனிதர்.

ஈழத்தில் பிரசித்தி பெற்ற வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுத ஆலய வரலாற்றைக் கூறும் பத்துப் பாடல்கள் அடங்கிய 'வெருகலம்பதி வேலவன் கீதங்கள்' எனும் இறுவட்டை வெளியிட்ட பெருமைக்குரியவர். சக்தி பண்பலையில் நிலாச்சோறு நிகழ்ச்சியில் இன்றுவரை தமது படைப்புகளை அரங்கேற்றி வருவதோடு, கனடா தமிழாழிக் காட்சியில் ஈழத்துக்கவிக்களம்நிகழ்ச்சியில் கவிஞர்,கருத்தாளர், நடுவர் போன்ற பணிகளிலும் பங்காற்றி வருகின்றார்.

இலங்கை வானொலியில் பல இலக்கியம், பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகளில் பங்குகொண்டவராவார். இவர் எழுதிய பல மெல்லிசைப்பாடல்கள் இன்றும் வானொலியில் ஒலிபரப்பாகி வருகின்றமை பெருமைக்குரியதாகும். இவை மட்டுமல்லாது முகநூல் குழுமங்களில் நடைபெறும் கவிதைப் போட்டிகளுக்கு நடுவராகவும் பணியாற்றி வருபவர். இரண்டு கவிதை நூல்களையும் வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசதுறையில் ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி வகித்துள்ளார். தற்போது சேவையில் ஓய்வு பெற்றுள்ள போதும் இலக்கியப் பணியில் தன்னை





ஈடுபடுத்தி வருகின்றமை பாராட்டுதற்குரியதாகும். ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்தில் முப்பத்து நான்கு வருடங்கள் ஆற்றிய கல்விப்பணி ஊடாக சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்கிய பெருமையும் இவரைச் சாரும்.

இவரது இலக்கியத் துறையைக் கௌரவிக்கும் முகமாக கடந்த 12.12.2024 ஆம் திகதி புத்த சாசன மற்றும் சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் அலரிமாளிகையில் நடைபெற்ற 39 ஆவது கலாபூசண விருது வழங்கும் விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

## கொவிட்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை எங்களுக்குக் காட்டுங்கள். தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர், முகவரி போன்ற விடயங்களை வெளியிடுவது எவ்வாறு மருத்துவ நெறிமுறைக்கு முரணாகிறது எனக் கேட்கிறேன். கடந்த ஆளும்தரப்புச் செய்த விடயங்கள் தவறு என்பது எங்களுக்குத் தெரியும். அதற்காக முன்னாள் ஜனாதிபதி மன்னிப்பும் கோரி இருந்தார். ஆனால் தற்போதுள்ள கேள்வி, பலவந்தமாக தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களை ஏன் வழங்க முடியாது என்பதாகும்" என்று ஹக்கீம் பதில் கேள்வி கேட்டார்.

அதற்கு அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, "வைத்திய நெறிமுறைக்கமையவே இந்த விவரங்களை என்னால் வழங்க முடியாமல் இருக்கிறது. வேறு எந்த காரணமும் இல்லை" என்றார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகஸ்த்தர்கள் சேவையில் இருந்து மீளழைக்கப்பட்டமை தொடர்பில் ஒரு தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர். அது குறித்துத் தெளிவுபடுத்தவேண்டும்.

அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும், மக்களின் வரிப்பணத்தை அரசியல்வாதிகளுக்காகசெலவுசெய்வதையும் குறைக்கவேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டே மக்கள் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள். அரசியல்வாதிகள் பரிவாரங்களுடன் வீதி சட்டத்திட்டங்களைப் பின்பற்றாமல் செல்வதை மக்கள் கடுமையாக விமர்சிக்கிறார்கள். இவ்வாறான செயற்பாடுகளை இல்லாதொழிக்க வேண்டும் என்பது மக்களின் நிலைப்பாடாகும்.

அரசியல்வாதிகள் பாதுகாப்புத்தரப்பினருடன் செல்வதும், மக்களின் வரிப்பணத்தை வேண்டிய அளவு வீணவிரயம் செய்வதும் இங்கே அரசியல் கலாச்சாரமாக உள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் பலகருத்துக்கள் குறிப்பிடப்படுவதை தெளிவுப்படுத்துவது அத்தியாவசியமானது.

1986 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் மற்றும் உரித்துக்களுக்கமைய முன்னாள் ஜனாதிபதிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் இந்தச் சட்டத்தில் எந்தளவான பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை. பாதுகாப்பு போதுமானதாகவில்லை என்று குறிப்பிடுபவர்கள் எந்த அடிப்படையில் அவ்வாறு குறிப்பிடுகிறார்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பில் ஆராய்வதற்கு ஓய்வுப்பெற்ற நீதியரசர் சித்ரசிறி தலைமையில் குழு நியமிக்கப்பட்டு பரிந்துரைகள் பெறப்பட்டன. தொழில்நுட்பக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டே முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்பட்டது.

பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற்கொண்டு பாதுகாப்பு வழங்குமாறு குழு பரிந்துரைத்துள்ளது. ஆகவே அரசியல் நோக்கங்களுக்காக முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை. தேவைக்கு மேலதிகமாகப் கடமையில் இருந்தவர்கள் மீளழைக்கப்பட்டுள்ளார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் புறக்கணிக்கப்பட்ட, வங்குரோத்து நிலையடைந்த அரசியல்வாதிகள் மக்களைத் தவறாக வழிநடத்தும் வகையில் போலியான விடயங்களைக் குறிப்பிடுகிறார்கள். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை மாத்திரம் இலக்காகக் கொண்டு முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக் குறைக்கப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்கு 60 பொலிஸாரும், 228 தரைப் படையினரும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்புக்கு 60 பொலிஸாரும், 4 தரைப் படையினரும், முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு 22 பொலிஸாரும், 188 தரைப் படையினரும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புக்கு 60 பொலிஸாரும், 58 தரைப் படையினரும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பாதுகாப்புக்கு 60 பொலிஸார் மட்டும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதேபோல் முன்னாள் ஜனாதிபதியான ரணசிங்க பிரேமதாசவின் பாரியாரான ஹேமா பிரேமதாசவின் பாதுகாப்புக்கு 10 பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு அதிகளவில் நிதி செலவழிக்கப்படுகிறது. 2024ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் 15 வரையான காலப்பகுதியில் மட்டும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்கு படையினர் 328 மில்லியன் ரூபாய், பொலிஸார் 327 மில்லியன் ரூபாய், ஜனாதிபதி செயலகம் 55 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் 710 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவின் பாதுகாப்புக்கு இராணுவம் 6 மில்லியன் ரூபாய், பொலிஸார் 185 மில்லியன் ரூபாய், ஜனாதிபதி செயலகம் 16 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் 207 மில்லியன் ரூபாய் செலவழித்துள்ளது, கோட்டபய ராஜக்சவின் பாதுகாப்புக்காக இராணுவம் 258 மில்லியன் ரூபாய், பொலிஸ் 39 மில்லியன் ரூபாய், ஜனாதிபதி செயலகம் 10 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் 307 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க ஓய்வுப் பெற்று மூன்று மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், அவரது பாதுகாப்புக்கு தரைப் படையினர் 60 மில்லியன் ரூபாயையும், பொலிஸார் 19 மில்லியன் ரூபாயையும், ஜனாதிபதி செயலகம் 3 மில்லியன் ரூபாயையும் செலவிட்டுள்ளன. மொத்தமாக 82 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் பாதுகாப்புக்கு பொலிஸ் திணைக்களம் 99 மில்லியன் ரூபாய், ஜனாதிபதி செயலகம் 12 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் 111 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பாரியாரான ஹேமா பிரேமதாசவின் பாதுகாப்புக்காக பொலிஸ் 30 மில்லியன் ரூபாயையும், ஜனாதிபதி செயலகம் 3 மில்லியன் ரூபாயையும் செலவிடப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 11 மாதமும் 15 நாட்களுக்கும் மாத்திரம் முன்னாள் ஜனாதிபதிகளுக்காக ஆயிரத்து 448 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில்தான் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு முறையாக மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. இந்தளவுக்கு ஏன் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளின் வீட்டுப் பணிகளுக்காகப் படையினரை வழங்க முடியாது. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தரைப் படையினரின் பாதுகாப்பு எதிர்வரும் வாரம் முதல் நீக்கப்படும். பொலிஸ் பாதுகாப்பு மாத்திரமே இனி வழங்கப்படும்.

இதற்கமைய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா குமாரணதுங்க ஆகியோரின் பாதுகாப்புக்குத் தலா 60 பொலிஸாரும், ஒவ்வொரு பொலிஸ் வாகனமும், ஜனாதிபதி செயலகத்தின் தலா 3 வாகனங்களும் வழங்கப்படும். முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவுக்கு 22 பொலிஸாரும் 1 பொலிஸ் வாகனமும், ஜனாதிபதி செயலகத்தின் 3 வாகனங்களும் வழங்கப்படும். அதேபோல் ஹேமா பிரேமதாசவின் பாதுகாப்புக்கு 10 பொலிஸாரும், 1 பொலிஸ் வாகனமும், ஜனாதிபதி செயலகத்தின் 3 வாகனங்களும் வழங்கப்படும். முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு 6 மாதத்துக்கொருமுறை மீள் பரிசீலனை செய்யப்படும்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை இவ்வாறு குறைப்பதால் வருடத்துக்கு 1,200 மில்லியன் ரூபாயைச் சேமிக்க முடியும். போலியான குற்றச்சாட்டுக்களுக்கும், அச்சுறுத்தலுக்கும் அடிபணியப்போவதில்லை. ஒட்டுமொத்த மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஆளும்தரப்புக்கு உண்டு என்றார்.

## எரியூட்டப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

'கொவிட் வைரஸ்' பரவல் காலத்தில் ஒரு இனத்தையும் மதத்தையும் இலக்குவைத்தே கோட்டாபய ராஜபக்சவின் ஆளும்தரப்பு நடந்து கொண்டது. கோட்டாபய ராஜக்ச ஆளும்தப்பு உலக சுகாதார நிறுவனம் வழங்கிய வழிகாட்டுதல்களையும் மீறிச் செயற்பட்டது. உரிமைகள் மீறப்பட்ட இஸ்லாமிய சமூகத்தினருக்கு, பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

அதனால் கடந்த ஆளும்தரப்பால் பிழையான தீர்மானத்தால் தகனம் செய்யப்பட்ட நபர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடொன்றை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் தகனம் செய்யப்பட்ட நபர்களின் பெயர் விவரங்களை வழங்குவதில் எந்த பிரச்சினையும் இல்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த விவரங்களை அறிந்துகொள்ள அனைத்து உரிமைகளும் இருக்கின்றன. அதனால் ரவூப் ஹக்கீம் கேட்டதுபோல், கொவிட் தொற்றில் உயிரிழந்து பின்னர் தகனம் செய்யப்பட்ட நபர்களின் விபரங்களை ஆளும்தரப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோன்று 'கொவிட் தொற்றி'ல் உயிரிழந்தவர்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்க அமைக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் பரிந்துரைக்கமையவே தகனம் செய்ய தீர்மானம் எடுத்ததாக சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவிக்கிறார். நிபுணர் குழுவொன்று பரிந்துரை சமர்ப்பித்தால், அதனை அவ்வாறே ஏற்றுக்கொள்ளாமல், அதனை ஆராய்ந்து பார்ப்பது செயலாளரின் கடமை.

எனவே கொவிட் தொற்றினால் உயிரிழந்து தகனம் செய்யப்பட்ட முஸ்லிம்களின் உறவினர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக அவர்களுக்கு நட்டஈட்டு தொகை ஒன்றை வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார்.

## 4 எம்.பிக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதித்துவப்படுத்தி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக அர்ஜுன சுஜீவ சேனசிங்க, முகம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது, மனோ கணேசன் ஆகியோரும், புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக கௌரவ பைசர் முஸ்தாபா ஆகியோரும் பதவியேற்றனர்.

பிரதிச் சபாநாயகர் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர்கள் கையொப்பமிட்டனர்.

அர்ஜுன சுஜீவ சேனசிங்க, மனோ கணேசன் மற்றும் பைசர் முஸ்தாபா ஆகியோர் இலங்கை நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களாக ஏற்கனவே பணியாற்றியுள்ளனர்.

## நாடாளுமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கக்கூடாது என்றுதான் திட்டவட்டமாகக் கூறியிருந்தார் எனவும் கூறினார்.

சர்வஜன அதிகாரத்தின் தலைவரான திலித் ஜயவீர உரையாற்றுகையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களுக்கு முன்னால் இருக்கும் கலாநிதி, பேராசிரியர், வைத்தியர் போன்ற தொழில் பட்டங்களை பயன்படுத்தி அழைப்பதை நீக்கினால் அனைத்துத் தரப்பினரின் அரசியலுக்கும் நல்லது என்றார். இல்லையென்றால் பட்டம், இல்லாதவர்களை சமுகத்தில் தள்ளி வைப்பதைப் போன்றிருக்கும், இங்கே பேராசிரியர் என்பது பல்கலைக்கழகத்திற்கும் வைத்தியர் என்பது வைத்தியசாலைக்குமே பொருந்தும் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உரையாற்றுகையில் அரச தரப்பின் பிரதமகொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ முடிந்தால் எனது கல்விச் சான்றிதழ்களை வெளிப்படுத்தட்டும் பார்க்கலாம் என்று சவால் விட்டார். எனது கல்விச் சான்றிதழ்கள் அனைத்தையும் நாளை (இன்று புதன்கிழமை) சபைக்கு ஆற்றுப்படுத்துவேன் என்றும் சூளுரைத்தார்.

அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற சமிந்ராணி கிரியெல்ல, இங்கு அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எனது பரிஸ்டர் பட்டம் தொடர்பில் கேள்வி எழுப்பினார். அதற்கான அனைத்துச் சான்றிதழ்களும் என்னிடம் உள்ளன. என்னால் நான் கல்வி கற்ற பிரிட்டனிலுள்ள நீதிமன்றத்திலும் வாதாட முடியும். ஏனெனில் நான் அங்கு பயிற்சியை நிறைவு செய்துள்ளேன். ஆனால் உங்கள் நீதி அமைச்சர் அங்கு கற்றிருந்தாலும் அவரால் அங்குள்ள நீதிமன்றத்தில் வாதாட முடியாது என்றார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, அந்த பட்டம் அந்த நாட்டில் மட்டுமே செல்லுபடியாகும். அது பழையகால நடைமுறை. இப்போது அதனைப் பயன்படுத்த முடியாது. அது இங்கு பொருந்தாது. ஆனால் சிலர் அதனை இங்கு இப்போதும் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக அஜித் பி.பெரேரா நாடாளுமன்ற உறுப்பினர் பயன்படுத்துகின்றார் - என்றார்.

## பழிவாங்குவதற்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நூல் வெளியீடும் மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. மன்னார் பாலத்திலிருந்து அதிதிகள் கலை ஆற்றுகைகளுடன் பேரணியாக விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பாரம்பரிய பொருட்கள் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தனது உரையில் தெரிவித்ததாவது:

தமிழர்களின் மிக முக்கியமான பண்பாடு விருந்தோம்பல். அதை நாம் இன்று மறந்து செல்கின்றோம். அவ்வாறு நாங்கள் மறந்து செல்பவற்றை நினைவூட்டத்தான் இவ்வாறான விழாக்கள் நடத்தப்படுகின்றன.

எமது சுற்றாடலை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் சிறுவயதிலிருந்தே பழக்கவேண்டியிருக்கிறது. அதற்காக ஒரு பாடவேளையை ஒதுக்குவது தொடர்பில் அமைச்சின் செயலருடன் கலந்துரையாட இருக்கின்றேன். வீதிகளில் குப்பைகளை வீசி எமது மாகாணத்தை அசிங்கமாக்குவதில் அநேகர் படித்தவர்கள்தான்.

மாவட்டச் செயலராகக் கடந்த காலத்தில் நான் இருந்தபோதுகூட இவ்வாறு பொதுமக்கள் சந்திப்பதற்கு வரவில்லை. இப்போது சின்ன விடயங்களுக்கும் ஆளுநர் அலுவலகத்துக்கு வருகின்றார்கள். அந்தப் பொதுமக்கள் தங்களது பிரதேசங்களிலுள்ள அரச திணைக்களங்களில் அந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று முறையிட்டே என்னிடம் வருகின்றார்கள்.

பொதுமக்கள் தினமான நேற்று திங்கட்கிழமை இரவு 8 மணியைத் தாண்டியும் பொதுமக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொடுத்திருந்தேன்.

முன்னைய காலத்தில் குறைந்தளவு பணியாளர்களுடன் மக்களுக்கு திறம்பட சேவைகள் வழங்கப்பட்டது. இப்போது அதிகரித்த ஆளணி மற்றும் கணினி வளங்கள் இருந்தாலும் மக்களுக்கு சிறப்பான சேவைகள் வழங்கப்படவில்லை என்பது கவலைக்குரியது.

மக்கள் தமது பிரதேச அல்லது கீழ்நிலை அலுவலர்களின் ஊடாக ஒரு சேவையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனமேல்நிலை அலுவலர்கள் அல்லது திணைக்களத் தலைவர்களிடம் சென்று முறையிட்டால் அதற்காகப் பழிவாங்கப்படுகிறார்கள். மேலதிகாரியிடம் சென்ற மக்களுடன் எரிந்து விழுந்து அவ்வாறு ஏன் சென்றீர்கள் எனக் கேட்டு, அவர்களுக்குத் தேவையை நிறைவேற்றிக்கொடுக்க மறுக்கின்ற கீழ்நிலை அலுவலர்கள் இப்போது இருக்கின்றார்கள். இவர்களால் எப்படி இப்படிச் சொல்ல முடிகின்றது? இவர்களின் மனநிலையை நினைத்து கவலையடைகின்றேன் - என்றார்.

இந்தப் பண்பாட்டு பெருவிழாவுடன் இணைந்ததாக நடத்தப்பட்ட கண்காட்சியை வெகுவாகப் பாராட்டிய ஆளுநர், அந்த ஆக்கங்களை இளையோரே செய்திருப்பதாகவும் அவர்களுக்கு சிறப்பான எதிர்காலம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இளங்கோவன், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்விவகார அமைச்சின் செயலர் பற்றிக்நிரஞ்சன், மன்னார் மாவட்டச் செயலர் கனகேஸ்வரன், நாட்டுக்கூத்து கலைஞர் கலாபூஷணம் மாசிலாமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இளங்கலைஞர் விருதை 10 பேரும், கலைக்குரிசில் விருதை 13 பேரும், சிறந்த நூல்களுக்கான விருதை 14 பேரும் பெற்றுக்கொண்டனர்.

## பயங்கரவாதத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட கருத்தை மீளப்பெறுவது குறித்துக் குறிப்பிடுகிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார அதற்குப் பதிலளித்தார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, கல்வி அமைச்சின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட அபிவிருத்திப் பணியாளர்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர் என்று எதிர்க்கட்சியின் உறுப்பினர் நளின் பண்டார குறிப்பிட்ட கருத்து முற்றிலும் பொய்யானது என்றார்.

போராட்டத்தின் போது பொலிஸார் மீது தாக்குதல் நடத்தி, வன்முறையாகச் செயற்பட்ட அபிவிருத்தி பணியாளர்கள் பொதுச் சட்டத்தின் கிழேயே கைது செய்யபட்டார்கள். எவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை. என்றார்.

சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க எழுந்து, பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து கருத்துக்களைப் பொறுப்புடன் தெரிவிக்கவேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தை ஆளும்தரப்பு எளிமையான முறையில் பயன்படுத்துகிறது என்ற நிலைப்பாட்டை சர்வதேச மட்டத்தில் தோற்றுவிக்கவே இவர்கள் முயற்சிக்கிறார்கள்.

எதிர்க்கட்சியின் உறுப்பினர் நளின் பண்டார குறிப்பிட்ட கருத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நிராகரித்துள்ளார். ஆகவே பொய்யான கருத்தை எதிரணியின் உறுப்பினர் வாபஸ் பெற வேண்டும் என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த எதிர்க்கட்சியின் உறுப்பினர் நளின் பண்டார, நான் பொய்யுரைக்கவில்லை. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கூற்றை ஆராய்ந்து இன்று பதிலளிக்கிறேன் என்றார்.

## திருட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இங்கே இருப்பவர்கள் நம்மில் பலரின் தகைமைகளைத் தேடுகின்றனர். அதை கேட்கிறார்கள்... இதை கேட்கிறார்கள்.

அவற்றை அறிவதில் மிகவும் ஆர்வமாக உள்ளனர். கடந்த காலங்களில் அமைச்சர்கள் மற்றும் ஆளும்தரப்பில் உள்ளவர்களின் கல்வித் தகுதிகள் தேடப்படவில்லை என்பது ஒருபுறம் எங்களுக்கு மகிழ்ச்சி. அவர்களின் திருட்டையே தேடினார்கள். எங்களின் திருட்டுகள் தொடர்பில் கண்டு பிடிக்க முடியாததால், கல்வித் தகுதியில் இவ்வளவு ஆர்வம் காட்டுவது சற்று முன்னேற்றகரமானதாகவே இருக்கின்றது" என்றார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவுள்ளது.

தந்தைசெல்வாவின்சிலைக்குமலர்மாலை அணிவித்து இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் அனைவருக்கும்அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# ஆ.ந.தீ எழுதிய 3 நூல்கள் சிட்னியில் வெளியீடு

(ஐங்கரன்)



தேசத்திற்கான காலக்கடமையில் தங்கள் வாழ்வை அர்ப்பணித்து நின்ற எழுத்தாளர் ஆ.ந.தீ அவர்களின் மூன்று நூல்களின் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 15.30 மணிக்கு சிட்னியில் வென்ட்வேத்வில் சமுதாய மண்டபத்தில் நடைபெற்றது.

ஆஸ்திரேலியா தமிழ்த்தாய் பதிப்பக வெளியீடாக 'காலத்தின் பரிசு' எனும் சிறுகதை நூலும், 'சாகாத சான்று' எனும் குறும் புதின நூலும் 'பகலாகிய இரவுகளும் இரவாகிய பகல்களும்' எனும் தலைப்பில் பொதுக்கட்டுரை ஆக்க நூலும் இந்நிகழ்வில் வெளியாகின.

எழுத்தாளர் ஆ.ந.தீ அவர்களும், அவரது துணையும் அவர்களின் மகனும் போர் வாழ்வின் வலிகளைக் கடந்தும் தொடரும் இடர்களை எதிர்கொண்டபோதும், விடுதலைப் பணியாகக் காலத்தின் பதிவுகளை மூன்று நூல்களாக வெளியீட்டு வைக்கின்றனர்.



எழுத்தாளர் ஆ.ந.தீ அவர்களால் போருக்குள்ளும் போரின் பின்னரும் எழுதிய படைப்புக்களின் வெளியீடான இந்நூல் வெளியீட்டு விழாவில் பெருந்திரளான சிட்னி மக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பல இலக்கிய ஆர்வலர்களும், தமிழ் பற்றாளர்களும் கலந்துகொண்டு உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

கடந்த முப்பதாண்டு காலமாக எழுதிவரும் படைப்பாளியான ஆ.ந.தீ என்ற பெயரில் மட்டுமன்றிக் கற்பகன், வர்ணன், ஆ.ந.பொற்கோ, பொலிகையூரான், நகுலா ஆனந்தன், தீவண்ணன், வைகை ஆகிய புனைபெயர்களிலும் எழுதி வந்துள்ளார். தான் பிறந்து வளர்ந்த மண்ணின் மீதான பெருவிருப்பே இவரது படைப்புக்களின் கருக்களாய் உருப்பெற்றிருக்கின்றன.

இவரது எழுத்து நடை தன்பாட்டில் அமைதியாக ஓடும் நதியைப் போன்று எளிமையானது. நல்ல தமிழ் வார்த்தைகள் இக்கதைகளுக்கு வசீகரத்தைத் தருகின்றன. நல்ல அழகான சொற்றொடர்கள் இயல்பாக வந்து விழுகின்றன. அன்றாடம் பாவனையில் பேசப்படுகின்ற பிற மொழி வார்த்தைகளைக் கூட தூய தமிழில் எழுதியது பாராட்டுக்குரியது. தனது எழுத்தாற்றலால் ஒவ்வொரு பாத்திரத்தையும் நம் மனதுக்கு நெருக்கமாக உணர வைத்திருக்கிறார் என மூத்த தமிழ் பெண் எழுத்தாளர் திருமதி தாமரைச்செல்வி தெரிவித்துள்ளார்.



நாம் கடந்து வந்த வாழ்வை, நாம் சந்தித்த மனிதர்களை மீண்டும் நினைவுபடுத்திப் பார்க்கச் செய்யும் படைப்புகள் இவை. அந்த வகையில் இக்கதைகள் ஒரு காலத்தின் கதைகள். ஒரு காலத்தின் துயரங்கள். பல ஆண்டுகளாக எமது மண் சந்தித்த பல துயர வரலாற்றையும் அதனால் எழுந்த வாழ்வியல் கோலங்களையும் தியாகங்களையும் பேசும் படைப்புகள் என மூத்த தமிழ் பெண் எழுத்தாளர் திருமதி தாமரைச்செல்வி தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# ஈழத்தில் திருப்பாவையும் ஆண்டாள் நாச்சியாரும்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா



'மாதங்களில் நான் மார்கழி ' என்று கீதையில் கண்ணன் கூறுகிறான். அந்த வாக்கை வைணவர்கள் மனங்கொண்டு மார்கழி முழுவதையும் வழிபாட்டுக்கு உரிய மாதமாக்கி விட்டார்கள் என்று தான் எண் ண வேண்டி இருக்கிறது. மார்கழி என்றதும் சுப நிகழ்ச்சிகளைச் செய்வதை பொதுவாகவே இந்துக்கள் தவிர்த்துக் கொள்ளுகிறார்கள்.இந்த நிலை ஈழத்திலும் காணப்படுகிறது.

திருமணம், வீடு குடுபுகுதல், காதுகுத்தல், ஏடுதொடக்குதல் முதலான சுப விஷயங்களை மார்கழியில் செய்வதை தவிர்த்து விடுகிறார்கள். அப்படித் தவிர்ப்பதற்கு அவர்கள் கூறும் காரணம் - மார்கழி பீடை பிடித்த மாதம் என்பதே ஆகும். ஆனால் உண்மையில் மார்கழி பீடுடைய மாதமே என்பதை மனமிருத் தத் தவறி விடுகின்றனர்.

மார்கழி தேவ வழிபாட்டுக்கு உகந்த மாதம் என்பதாலேயே அதில் மக்களுக்கான விழாக்களைத் தவிர்த்தார்கள் என்பதுதான் உண்மை யாகும்.

மார்கழியில்த்தான் திருப்பாவை , திருவெம்பாவை, பாடப்படுகிறது. ஆருர்த்தா தரிசனம், வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் திறத்தல், போன்ற முக்கிய தெய்வ வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இந்தவ கையில் மணிவாசகப் பெருமானும் ஆண்டாள் நாச்சியாரும் சைவர்களாலும், வைணவர்களாலும் ஏற் றிப் போற்றி வணங்குதலுக்கு ஆளாகிஇருப்பதையும் காண்கின்றோம்.

மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவைபற்றி ஈழத்தவர்களுக்கு மிகவும் நன்றாகவே தெரியும். ஈழத்தில் இருக்கும் சைவக் கோவில்கள் பெரியனவாக இருந்தாலும், சிறியனவாகஇருந்தாலும், அங்கெல்லம் மார்கழியில் திருவெம்பாவை மிகவும் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படும்.

காலையில் அதுவும் மிகவும் அதிகாலையில்திருப்பள்ளிஎழுச்சியுடன் ஆரம்பித்து திருவெம்பாவை பாடல்முழுவதும் பாடி கோவிலில் பூஜை வழிபாடு நிறைவு பெறும்.

சைவ ஆலயங்களான அனைத்து ஆலயங்களிலும் இந்த நடை முறை நீண்ட காலமாகவே நடை பெற்று வருவதை யாவரும் அறிவர். அதேவேளை விஷ்ணு ஆலயங்களில் திருவெம்பாவைக்குப் பதி லாக திருப்பாவை பாடப்படும் முறை காணப்படுகிறது. திருவெம்பாப் பாடல்களை பெரும்பாலான சைவர்கள் அறிந்தளவும் திருப்பாவையினை அறிந்தவர்களாக இல்லை என்பது முக்கிய விஷயமாகும். அதேநேரம் மணிவாசப் பெருமானை அறிந்ததுபோல் ஆண்டாள் நாச்சியார் அதிகளவில் அறியப்பட வில்லை என்பதும் நோக்கத் தக்கதாகும்.

ஈழத்தில்பலபாகங்களிலும்விஷ்ணு ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. அங்கெல்லாம் பூஜைகளை ஆற்றுகின்றவர்கள் பெரும்பாலும் சிவப்பிராமணர்களே என்பது இங்கு முக்கியமாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஈழத்தில் சைவமே நிறைந்து காணப்படுகிறது. வைஷ்ணவம் என்னும் பெயர் படித்த வர்கள் மட்டத்தில் தெரிந்தளவு பாமர்களிடம் சென்றடையவில்லை என்றுதான் கொள்ள வேண்டி இருக் கிறது. வைஷ்ணவ சம்பிரதாயங்கள் இந்தியாவில் இருப்பது போன்று ஈழத்தில் இல்லை என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். வடகலை, தென்கலை, நாமம் இடுதல், என்றால் பெரும்பாலான ஈழத்தவ ர்களுக்கு விளங்குமாஎன்பதுஐயமேயாகும். இந்த நிலையில்வைஷ்ணவ அடியவாராய் விளங்கும் ஆண்டாள் நாச்சியார் பற்றியும் அநேகம் பேர் அக்கறை காட்டும் நிலையிலும் இல்லை என்றுதான்எண்ணவேண்டி இருக்கிறது.

மணிவாசகப் பெருமானை அறிந்து வைத்திருக்கும் அளவுக்கு சூடிக்கொடுத்த சுடர்க்கொடியை அறிந்திருப்பவர் மிகவும் குறைவாகவே காணப்படுகிறார்கள்.

பல்கலைக்கழகத்தில் தமிழை, இந்துநாகரிகத்தைப் படிக்கும் மாணவர்களும் படிப்பிக்கும் ஆசிரியர் ளும் பாடத்துக்காக ஆண்டாள் நாச்சியாரையும் அவரது திருப்பாவையும் அவரின் படைப்புக்களையும் அவர்பற்றிய வரலாற்றையும் அறிந்து வைத்திருக்கிறார்களே அன்றி மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பு மிகவும் அரிதாகவே இருக்கிறது என்பது மிகவும் முக்கிய விஷயமாகும்.

யாழ்ப்பாணம் முழுவதும் நாவலர் கலாசாரம், கநதபுராண கலாசாரம் நிறைந்த இடமாகும். இங்குள்ள கோவில்கள் பெரும்பாலும் ஆகமவிதிப்படி பூஜைகள் நடைபெறும் சைவக் கோவில்களேயாகும். ஆனால் பொன்னாலை வரதராஜப் பெருமாள், வல்லிபுர ஆழ்வார், யாழ்நகரில் உள்ள பெருமாள் கோவில் , தற்பொழு இணிவிலில் புதிதாக அமைக்கப்பட்ட இணுவில் திருப்பதி கோவில் யாவும் விஷ்ணு கோவில்களே ஆகும். விஷ்ணு கோவிலாக இருந்தாலும் வைஷ்ண பட்டாச்சாரியார்கள் இங்கு பூஜை ஆற்றுவதில்லை. இங்கு பூஜை ஆற்றுகிறவர்கள் யாவருமே சிவப் பிராமணர்களே என்பது நோக்கத்தக்கதாகும்.

ஈழத்திலுள்ள விஷ்ணு ஆலயங்களில் சிவப்பிராமணர்களும், சைவர்களும் இருந்தாலும்மார்கழியில்அங்கெல்லாம் ஆண்டாள் நாச்சியாரின் வடிவங் கொண்ட சிலைஉள்வீதியில்பக்தியுடன் வலம் கொண்டுவரப்பட்டு ஸ்ரீரங்கநாதர் முன்னே வைக்கப்பட்டு திருப்பாவை இன்றளவும் காலைப் பூஜையின் பொழுது பாடப்பட்டு வருகிறது என்பது முக்கிய அம்சம் எனலாம்.

வைஷ்ணவம் என்பது சமயபாடப் புத்தகத்தில் படிக்கும் அளவுக்கு ஈழத்தில்இருக்கிறதே அல்லாமல் சைவம் போன்று மக்களால் கடைப்பிடிக்கும் அளவுக்கு இல்லை என்பது மனங் கொள்ளத் தக்கதாகும்.

திருமுறைகளும், நாயன்மார்களும் அறியப்பட்டளவுக்கு ஆழ்வார்களும் அவர்களது பாசுரங்களும் பொதுமக்களிடம்சென்றடையவில்லைஎன்றுதான் கருதவேண்டி இருக்கிறது.அதற்குக் காரணம் ஈழ த்தில் சைவம் பெற்ற முக்கியத்துவமே எனலாம்.அறுபத்து மூன்று நாயன்மார் பெற்ற முக்கியத்துவத்தை பன்னிரு ஆழ்வர்களும் ஈழத்துப் பெரும்பாலான மக்களிடம் பெற்றிருக்கிறார்களாஎன்பதுஐயத்துக்கு உரியதாகவே இருக்கிறது. பெரிய புராணம் கோலோச்சிய அளவுக்கு, கந்தபுராணம்போற்றப்படும்அளவுக்கு வைஷ்ணவ ஆழ்வார்களும் அவர்களது திருப்பாசுரங்களும் அறியப்பட்டிருப்பது மிகவும் குறைவென்றே கொள்ள வேண்டி இருக்கிறது.

சமயச் சொற்பொழிவாற்றுகின்ற பெரியவர்கள்கூட சைவ இலக்கியங் களையும், சைவ மேன்மை களையும் எடுத்துச் சொல்லுவார்களே அன்றி வைஷ்ண சம்பிரதாயங்களையோ அல்லதுவைஷ்ணவ ஆழ்வார்களையோ பற்றியோ சொல்லுவது மிகவும் அரிதாகும். மணிவாசகர் மன்றம், மணிவாசகர் சபை என்றெல்லாம் அமைத்து அதன்மூலம் போட்டிகளிம் பரிசுகளும் அளித்து மார்கழியில் வீதிகளில் மணிவாசகரின் திருப்பள்ளி எழுச்சி திருவெம்பா பாடல்களைப் பாடும் அளவுக்கு - ஆண்டாள் நாச்சியாரோ அவரது திருப்பவையோ இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

நாயன்மார்களைப் போற்றும் முகமாக குருபூசைத்தினம் என்று அமைத்து கோவில்களிலும், பாட சாலைகளிலும், சிறப்பான பூஜை வழிபாடு செய்யும் அளவு வைஷ்ணவ ஆழ்வார்களுக்கோ குறிப்பாக ஆண்டாள் நாச்சியாருக்கு ஈழத்தில் செய்யப்படுவது அரிதென்றே சொல்லலாம்.

யாழ்ப்பாணத்தில் புதிதாக இணிவிலில் திருப்பதி என்னும் பெயரில் விஷ்ணுவுக்கு பெரியதொரு கோவில் அமைக்கப் பட்டிருக்கிறது. இங்கு விநாயகர் தொடக்கம் விஷ்ணுவரை மிகவும் பிரமாண்டமான சிலா விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இக்கோவிலில் ஆண்டாள் நாச்சியா ருக்கும் ஒரு சன்னிதானம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இங்கு செல்லும் அடியவர்கள் ஆண்டாள்நாச்சியாரையும்வணங்கியே செல்லுகிறார்கள். விஷ்ணு ஆலயங்களில் ஆண்டாள் நாச்சியார் வைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் வழிபடச் செல்லும் அடியார்களுக்கு சரியானவிளக்கம்இல்லாதகாரணத்தால் விஷ்ணு கோவில் செல்பவர்கள் ஆண்டாள் பற்றிக் கவனம்செலுத்தத் தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள் என்பதும் நோக்கத்தக்கது.

வல்லிபுரக் கோவிலில் திருமண்ணும் திருநீறும் வழங்கப்படுகிறது. விஷ்ணு ஆலயமாக இருந்தாலும் சிவனும் விஷ்ணுவும் இங்கு பிரித்துப் பார்க்கும் விதத்தில் வழிபாடு அமையவில்லை என்றுதான்கொள்ளவேண்டியிருக்கிறது.

ஆண்டாள் நாச்சியாரின் தமிழ் அமுதத் தமிழ். அவரின் பக்தி அளவிட முடியாத பக்தி. ஈழத்தில் சைவ த்தின் உச்சத்தால் வைஷ்ணவ அடியரான ஆண்டாள் நாச்சியாரை சாதாரண மக்கள்அறியும்வாய்ப்புக்கிட்டவில்லை என்றுதான்கொள்ளவேண்டியிருக்கிறது.

**ஓங்கி உலகளந்த உத்தமன்**
**பேர்பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி**
**நீராடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்**
**மும்மாரி பெய்து**
**ஓங்கு பெறும்செந் நெல்ஊடு**
**கயலுகளப்**
**பூங்குவளைப் போதில் பொறி**
**வண்டு கண் படுப்பத்**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த**
**முலைபற்றி**
**வாங்கமீ குடம் நிறைக்கும்**
**வள்ளல் பெரும் பசுக்கள்**
**நீங்காத செல்வம்**
**நிறைந்தேலோர் எம்பாவாய்.**

காலைக்கதிர் Kalaikkathir

# புதிய சபாநாயகருக்கு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் நாடாளுமன்றில் வாழ்த்து



10 ஆவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ள வைத்தியகலாநிதி ஜகத் விக்கிரமரத்னவுக்கு, ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிஷாத் பதியுதீன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

புதிய சபாநாயகருக்கு சபையில் வாழ்த்து தெரிவித்து, உரையாற்றிய அவர் கூறியதாவது -

புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உங்களுக்கு எனது வாழ்த்துக்கள்; அதேபோன்று, எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பெரும்பான்மையைக் கொண்டுள்ள ஓர் அரசாங்கத்தின் சபாநாயகராக நீங்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறீர்கள். ஒரு குறுகிய காலத்துக்குள் இரண்டாவது சபாநாயகராக நாடாளுமன்றத்தில் தெரிவாகியுள்ள நீங்கள், ஒரு வைத்தியராகவும் இருக்கின்றீர்கள்.

எனவே, சகல கட்சிகளையும், அனைத்து உறுப்பினர்களையும் சமமாக மதித்து, அனைவரினதும் உரிமைகளைப் பாதுகாத்து, நேர்மையாகச் செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கையோடு, உங்களை வாழ்த்தி விடைபெறுகின்றேன். நன்றி என்று குறிப்பிட்டுள்ளார்.

# மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு பெற தமிழ்நாடு முதலமைச்சருக்கு கடிதம்

## தேசிய தமிழ் மக்கள் முன்னணி எழுதியது

(கேதீஸ்)

இலங்கைஇந்தியமீனவர்கள் சம்பந்தமான பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீர்வை பெற்றுக் கொடுக்கக்கோரி தேசிய தமிழ் மக்கள் முன்னணி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்களுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக தேசிய தமிழ் மக்கள் முன்னணியின் தலைவர் ஆ.கமாலானந்தன் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

இலங்கை இந்திய மீனவர்கள் சம்பந்தமான பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு பெற்றுக்கொள்வதற்கான ஒரு முயற்சியாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ஒரு கடிதத்தைத் தேசிய தமிழ் மக்கள் முன்னணியின் தலைவர் ஆனந்தசிவம் கமலாநந்தன் மற்றும் சர்வதேசபேச்சாளரான தோழர் நேசன் சங்கர் ராஜி ஆகியோரால் இணைந்து இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் தமிழக மீனவர்களுக்கும் இலங்கையின் வட மாகாணத்தில் வசிக்கக் கூடிய மீனவர்களுக்கும் இடையிலான மீன்பிடி பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு பெற்றுக் கொடுக்குமாறும் இரு நாட்டு மீனவர்களுக்கிடையிலும் ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த மீன்பிடி பிரச்சினையை தீர்ப்பதற்கு தமிழக அரசு இந்திய மத்திய அரசுடன் பேசி ஒரு நிரந்தர தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கையின் வட பகுதி கடல் பிரதேசத்திற்குள் மீன்பிடிக்கச் செல்வதால் வடமகாணத்தில் வசிக்கக்கூடிய மீனவ சமூகம் பொருளாதார ரீதியிலும் வாழ்வாதாரத்திலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இரு மீனவ சமூகங்களுக்கும் இடையிலான முறுகல் நிலைமையை தீர்த்து வைத்து ஒரு சுமுகமான நிலைமையை ஏற்படுத்துவீர்கள் என நாங்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளோம் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.






# இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கும் சம வாய்ப்பு வேண்டும்

## கிழக்கின் கேடயம் வலியுறுத்து



(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்களின் இந்திய விஜயத்தை தொடர்ந்து நாடுபூராகவும் புரையோடிப் போன பிரச்சினைகளுக்குசமஷ்டி தீர்வு முன்வைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்த வண்ணமுள்ளது. எமது நாட்டில் தீர்க்கப்படாமல் பல பிரச்சினைகள் பல தசாப்தங்களாக தேங்கி கிடக்கிறது. அவற்றுக்கு ஒரு தீர்வு பொறி முன்வைக்கப்பட வேண்டும் என்றால் அரசாங்கத்துடன் தமிழர் தரப்பும், முஸ்லிம் தரப்பும் ஒரே மேசையில் இருந்து பேசி தீர்க்க வேண்டும் என கிழக்கின் கேடயம் பிரதானியும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் -

ஒரு தீர்வு பொறி முன் வைக்கப்பட வேண்டியது சில நாடுகளின் அழுத்தத்தாலோ அல்லது சில குழுக்களின் தேவைகளுக்காகவோ தீர்மானிக்க முடியாது. பேச்சின் போது கட்டாயம் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் அந்த பேச்சு மேசையில் இருக்க வேண்டும். அதனூடாகத்தான் யாருக்கும் பாதகமில்லாத தீர்வைப் பெற முடியும். யாருக்காவது நியாயமான தீர்வுகள் கிடைக்காத போது அது இன்னொரு போராட்டத்தை நோக்கி இழுத்துச் சென்றுவிடும் என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை.

பாசிஸபுலிகளின் கொள்கையிலிருந்து மாறாதவர்கள் வடக்கும் கிழக்கும் இணைய வேண்டும், தமக்கு மட்டும் சமஷ்டி தீர்வு கிட்ட வேண்டும், இணைந்த வடக்கு கிழக்கில் சமஸ்டி என்றெல்லாம் பேசுகிறார்கள். இன்று உலகம் நவீனத்துவமடைந்து எவ்வளவு தூரம் வளர்ந்து விட்டது. இலங்கையைப் பொறுத்தமட்டில் ஒற்றையாட்சி போதுமானது. இங்கு காணப்படும் வருமான ஏற்றத்தாழ்வை இல்லாமலாக்கி சகல குழந்தைகளும் ஒரே மொழியில் கல்வி கற்றால், எல்லோரையும் சமனாக நடத்தும் திருத்தம் அரசமைப்பில் கொண்டுவரப்பட்டால் பெரும்பாலான பிரச்சினைகள் தீர்ந்து விடும்.

மூன்று தசாப்த போராட்டத்திற்கு ஒரு தீர்வை வழங்க வேண்டும் என்றால் அங்கு ஒரே மேசையில் பேசி தீர்வுகள் எட்டப்பட வேண்டும். கடந்த காலங்களில் முஸ்லிங்கள் புறக்கணிக்கப்பட்ட போதும் கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள், பொது நிறுவனங்கள் சம்மேளனத்தினூடாக நாங்கள் அதை வலியுறுத்தினோம். பேச்சு என்று வருகின்ற போது அரசாங்கமும், தமிழர்களும், முஸ்லிங்களும் சமமாக இருந்து பேச வேண்டும். - என்றார்.

# மூதூர் பிரதேச செயலக கிறடிட் கவுன்சில் நிர்வாகிகள் நினைவுச்சின்னம் வழங்கல்







(நௌபர்)

மூதூர் பிரதேச செயலக ஊழியர்களின் நன்மை கருதி மூதூர் பிரதேச செயலக ஊழியர்களை அங்கத்தவர்களாக இணைத்துக் கொண்டு நடத்தப்பட்டுவரும் கிறடிட் கவுன்சில் கடன் சபையானது சிறப்பாக செயற்பட்டுவருவதாக அதன் தலைவரும் பிரதி திட்டமிடல் பணிப்பாளருமான பி.அறபாத் கூறினார்.

இது அங்கத்தவர்களுக்கு மாத்திரம் வட்டியில்லா கடன் வழங்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட கிறடிட் கவுன்சில் ஆனது 2018 ஆம் ஆண்டு முன்னாள் பிரதேச





செயலாளர் எம்.முபாறக்கால் ஏற்படுத்தப்பட்டு தற்போது வரை இது பிரதேச செயலகத்தில் சிறப்பாக செயற்பட்டுவருகின்றது.

இதன் நிர்வாகிகளான தலைவர் செயலாளர் பொருளாளர் மற்றும் போசகர் ஆகியோர்கள் பிரதேச செயலகத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமை மாலை நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டதோடு அதன் அங்கத்தவர்களுக்கும் இதன்போது பரிசுகள் வழங்கப்பட்டன.

கிறடிட் கவுன்சில் போசகரும் அதன் அங்கத்தவரும் மூதூர் பிரதேச செயலளருமான எம்.பீஎம்.முபாறக் இதில் கலந்துகொண்டு உரையாற்றினார்,

# அல்–அஸ்ஹர் மத்திய கல்லூரியில் மாணவருக்கு ஊடகச் செயலமர்வு

(ஸாகிர்)

கண்டி தெநுவர வலயத்திற்குட்பட்ட தெகியங்க அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) ஊடகப்பிரிவு மாணவர்கள் மற்றும் உயர்தர மாணவர்களுக்கான இலவச ஊடக செயலமர்வு அண்மையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

ஆர்.ஜே.மீடியா வலையமைப்பின் கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாத்திமா சப்னாவின் ஏற்பாட்டில், கல்லூரியின் அதிபர் எம்.மன்சூர் மபாஹிர் அனுமதியுடன் பிரதி அதிபர் உஸ்மான் லெப்பை மொஹமட் ரிஸானின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஊடகத்துறையின் அவசியம் மற்றும் எமது இலக்கை வெற்றிகரமாக மாற்றுவது எப்படி போன்ற தலைப்புகளை உள்ளடக்கி செயல்முறையுடன் கூடிய விரிவுரைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த அமர்வின் விரிவுரைகளை ஆர்.ஜே.மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் அறிவிப்பாளருமான ஏ.எம்.இன்சாப் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இதில் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



# சபாநாயகர் பதவி விலகியதைப் போல் 'பார் பெர்மிட்'காரர்களும் விலகட்டும்

## முன்னாள் எம்.பி. சுமந்திரன் வலியுறுத்து

கல்வித் தகமைச் சர்ச்சை காரணமாக சபாநாயகர் ரன்வல பதவி விலகியதைப்போன்று 'பார் பெர்மிட்' வழங்குவதற்குப் பரிந்துரை செய்தவர்களும் பதவி விலக வேண்டும் என தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

சபாநாயகர் பதவி விலகியமை தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கலாநிதி பட்டம் தனக்கு இருக்கிறது, அதனை தற்போது நிரூபிக்க முடியாது என்பதால் சபாநாயகர் பதவி விலகியுள்ளார். அது நல்லதொரு விடயம். அதை நான் வரவேற்கின்றேன்.

இதேபோன்று 'பார் பெர்மிட்'டுக்குப் பரந்துரை செய்தவர்களும் தாமகவே பதவி விலகுவார்களாக இருந்தால் நல்லது.

விக்கினேஸ்வரன் ஐயா தான் 'பார் பெர்மிட்' எடுத்துக் கொடுத்துவிட்டேன் எனத் தெரிவித்து தேர்தலில் போட்டியிடாமல் கொழும்புக்குப் போய்விட்டார். இருந்தாலும் வடக்கு கிழக்கில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறைய 'பார் பெர்மிட்'கள் கொடுக்கப்பட்டுள்ளதாக ஆளும்தரப்பு அறிவித்துள்ளது.

அதைப் பரிந்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் என்ற தகவல் இன்னும் வரவில்லை. அந்தத் தகவல் வருகின்ற போது பரிந்துரைத்தவர்களும் சபாநாயகர் பதவி விலகியது போன்று விலக வேண்டும். அதனை சந்தோசமாக வரவேற்கின்றோம் எனத் தெரிவித்தார்.

(100)

காலைக்கதிர் Kalaikkathir

# இவ்வருடத்தில் இருவிருதுகளைபெற்ற ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல்

(அஷ்ரப்கான்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்தில் நடத்தப்பட்ட 'தமிழ் இலக்கிய விழா நிகழ்வில்' 2023 ஆம் ஆண்டின் ஊடகத்துறைக்கான 'இளங்கலைஞர் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம். பிஸ்ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்களான, எச்.இ. எம்.டப்ளியு, ஜி.திசாநாயக்க, மதன்நாயக்க எம்.கோபால ரெத்தினம், எம்.நசீர், குணநாதன் மற்றும் அரச உயர் அதிகாரிகள், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் பொன்னாடை போர்த்தி, சான்றிதழ் மற்றும் விருது வழங்கி சபையோர் மத்தியில் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிறந்த ஊடகவியலாளருக்கான விருது-2024. சர்வதேச தமிழ் வானொலி பிரான்ஸ் (ஐ.ரி.ஆர்) இன் 28 ஆவது ஆண்டு விழா யாழ்ப்பாணம் ரில்கோ மண்டபத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது 'சிறந்த ஊடகவியலாளருக்கான விருது -2024' ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் அவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

விருதைபூமணி அம்மா அறக்கட்டளையின் தலைவரும், ஐ.ரி.ஆர். சர்வதேச தமிழ் வானொலி பிரான்ஸின் பணிப்பாளருமான விசு செல்வராஜா, தமிழ்நாடு கல்லிக்கடைக் குறிச்சி திருநெல்வேலி தேசிய கல்வி அறக்கட்டளையின் நிறுவினரும் தொழிலதிபர் முனைவர் ஆமுகமது முகைதீன், மலையக மக்கள் முன்னணியின் சிரேஸ்ட உபதலைவர் கலாநிதி சதீஸ்குமார் சிவலிங்கம், கனடா யுகம் வானொலியின் சிரேஸ்ட அறிவிப்பாளர் மும்தாஜ் கலீல், பலர் இதன்போது கலந்து பொன்னாடை போர்த்தி, மாலை அணிவிக்கப்பட்டு சிறந்த ஊடகவியலாளர் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளையைச் சேர்ந்த ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் சுமார் 18 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் சுயாதீன ஊடகவியலாளராக செயற்பட்டுவருகின்றார். அவர் கிழக்கு மாகாணத்தின் பல கிராமப்புறங்களுக்கும் நேரில் சென்று மக்களின் பிரச்சினைகளை செய்திகளாகவும், கட்டுரைகளாகவும், ஆவணப்படுத்தல் தொகுப்புக்கள் ஊடாகவும் வெளிக்கொணர்ந்து வருகின்றனார்.



இந்நிலையில் அவர் 2008இல் சிறந்த மக்கள் சேவை ஊடகவிருது, 2018இல் சிறந்த கட்டுரையாளருக்கான விருது, 2022ஆம் ஆண்டில் சுப்பிரமணியம் செட்டியார் விருது, உள்ளிட்ட தேசியான விருதுகளையும் மற்று கிராமிய, பிரதேச மட்டங்களில் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்து அவர் தனது ஆரம்பக்கல்வியை அவர் பிறந்த களுமுந்தன்வெளி கஜமுகன் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை திருப்பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்திலும் (தேசியபாடசாலை), மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அரசியல்விஞ்ஞானத்துறையில் தனது பிஏ பட்டப்படிப்பையும் பூர்த்திசெய்து, ஊடகத்துறையில் டிப்ளோமாகற்கைநெறியையும் பூர்த்தி செய்துள்ளார்.

அதற்கும் மேலாக பல சிவில் அமைப்புகளுடன் இணைந்து சமூக சேவைகளையும் மேற்கொண்டு வரும் அவர் யோகாசன பயிற்றுவிப்பாளராகவும், முதவுதவிப் பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

அவர் 2022 ஆம் ஆண்டு அவர் எழுதிய மாரியம்மன் பாடல் இறுவெட்டாக வெளியிடப்பட்டுள்ளது. பாடலாசிரியர், எழுத்தாளர் என இலக்கியத்துறையில் மிளிர்கின்ற அவர் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

இவ்வாறு பல்துறை ஆற்றலுடைய ஊடகவியலாளர்களை அவ்வப்போது கௌரவித்து ஊக்கப்படுத்துவதால் அவர்களது கலைப் படைப்புக்களும், எழுத்தாற்றலும் சமூகத்திற்கு இன்னும் வருச்சேர்க்கும் என எதிர்பார்க்கலாம்.

கடந்தயுத்தகாலத்திலிருந்து உயிரையேதுச்சமெனநினைத்து தமது ஊடகப் பணியை கைவிடாது இன்றுவரை புலம்பெயந்து செல்லாமல் இம்மண்ணிலேயே மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என செயற்பட்டுவரும் இவ்வாறான ஊடகவியலாளர்களின் பணிகள் போற்றப்பட வேண்டும். இதுபோன்று ஊடகவியலாளர்களின் மத்தியில் காணப்படுகின்ற குறைபாடுகளையும் நீங்குவதற்கும் சமூக நோக்கர்கள் முன்வர வேண்டும் என்பதையும் இதில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.12.2024இல் வெளியிடப்பெற்றது